பக்கங்கள்: இருபத்தாறு

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9: வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 10 சனிக்கிழமை (25-12-1999) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம் : 30

# இயக்கச்சி முன்னரண்களுக்குள் ஊடுருவ புலிகள் தீவிர முயற்சி!

## கடுஞ்சண்டை மூண்டுள்ளது

கொழும்பு, டிசெம்பர் 25

**இயக்கச்சி பாதுகாப்பு முன்னரண்களுக்குள் ஊடுருவ விடுதலைப்புலிகள் பல தடவைகள் முயற்சி எடுத்திருப்பதாகவும், வடக்கு முனையில் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையில் கடுஞ்சண்டை மூண்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சை மேற்கோள் காட்டி கொழும்பு செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.**

பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்ததாவது :-

"இயக்கச்சி முன்னரங்க நிலைகளுக்குள் ஊடுருவ புலிகள் பல தடவைகள் எடுத்த முயற்சியை படையினர் முறியடித்துள்ளனர்.

இரு தரப்பிலும் நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த 48 மணி நேரத்தில் 98க்கும் அதிக புலிகள் உயிரிழந்துள்ளனர். இராணுவத் தரப்பில் 11 படையினர் உயிரிழந்தனர்; 72 பேர் காயமடைந்தனர்.

பரந்தனில் கிழக்கு, மேற்கு முன்னரண்களை ஊடறுத்துச் செல்வதற்கு இரு பெரும் தாக்குதல்களைப் புலிகள் ஆரம்பித்தபோது இரு தரப்பிலும் சரமாரியாக ஷெல், பீரங்கித்தாக்குதல்கள் வெடித்தன. கவசவாகனங்கள் கொண்டும் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

தனங்களப்பு, இயக்கச்சி, கோயிலாக்கண்டிப் பகுதிகளிலும் நேற்று முன்தினம் முழுநாளும் புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர்-

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்டி வீதியில் இயக்கச்சிக்குக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தளபதிக்கு பதவி நீடிப்பு



கொழும்பு,டிசெ.25

கடந்த புதன்கிழமை ஓய்வுபெறவிருந்த இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியாவுக்கு மேலும் ஒரு வருடத்துக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க லண்டனுக்குப் புறப்படுவதற்கு முன்னர் இந்த சேவை நீடிப்பை வழங்கினார் எனப்பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3)

## இராணுவத்தளபதி ஆனையிறவு விஜயம்

விடுதலைப்புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும ஆனையிறவுப் படைத்தளத்துக்கு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டார்.

வடபிராந்திய கட்டளைத் தளபதியான மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க மற்றும் டிவிஷன் தளபதிகள் சகிதம் அங்கு சென்ற இராணுவத் தளபதி அங்குள்ள படை அதிகாரிகளுடன் கலந்துரையாடி நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

பாதுகாப்பு நிலைமை குறித்து அங்கு அவர் ஆராய்ந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## ரணில், கரு ஜெயசூரியாவைச் சேர்த்து தேசிய அரசு அமைப்பதற்கு முயற்சி?

கொழும்பு,டிசெ.25

ஐ.தே.கவின் முன்னணித் தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க, கரு ஜெயசூரியா போன்றவர்களை அரசாங்கத்துக்குள் உள்இழுக்க முயற்சி மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தமது சகாக்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக கொழும்புச் செய்தி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

அடுத்த மாதம் மேற்கொள்ளவிருக்கும் அமைச்சரவை மாற்றத்தின் போது அவர்களுக்கு பிரதமர் போன்ற முக்கிய அமைச்சர் பதவிகளை வழங்க உத்தரவாதம் அளித்து பேச்சுக்களை நடத்தும்படியும் -

அவர்கள் இணங்கிவந்தால் தேசிய அரசு ஒன்றை அமைத்து தென்பகுதியிலிருந்து இனப்பிரச்சினைக்கான தீர்வை ஒரே குரலில் முன்வைக்க முயற்சிக்கலாம் என்றும் -

இந்த முயற்சியில் அரசதரப்புப் பிரமுகர்கள் முழுமையாகத் தம்மை ஈடுபடுத்திக்கொள்ளவேண்டும் என்றும்-

ஜனாதிபதி தமது சகாக்களுக்கு தெரிவித்துள்ளதாக அந்தச் செய்தி வட்டாரம் தெரிவித்தது.

ஐ.தே.கவின் ஏனைய தலைவர்களான ரொனி டிமெல், கருணசேன கொடிதுவக்கு, காமினி அத்துக்கோறளை, மகிந்த சமரசிங்க, டிரோன் பெர்னாண்டோ ஆகியோரையும் அரசுக்குள் இழுக்க முயற்சி மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி தமது சகாக்களை கேட்டுள்ளாராம். (உ-3)

## குண்டைக் கண்டுபிடிக்க கோட்டையில் தேடுதல்!

கொழும்பு, டிசெ.25

கொழும்பு கோட்டையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் குண்டுகள் வைக்கப்பட்டிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து நேற்றுக் காலை அந்தப்பகுதியில் பெரும் தேடுதல் இடம்பெற்றது.

எனினும் குண்டுகள் எதுவும் கைப்பற்றப்பட்டதாகத் தெரியவில்லை.

ஆனால் சிலிங்கோ நிறுவனத்தின் மேல் மாடிக் கட்டடத்தின் மேற்பகுதியில் சத்திவாய்ந்த குண்டு ஒன்று கைப்பற்றப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டதாக 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது. (உ-3)

## வன்முறையில் ஈடுபட்ட பொலீஸ்குழு

தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸ் குழு ஒன்று பொதுமக்களின் வீடுகளைத் தாக்கி சொத்துக்களை அழித்த சம்பவம் ஒன்று கடந்த செவ்வாயன்று கம்புறுப்பிட்டிய தேர்தல் தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

களுத்துறை பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் இருந்து அழைத்துவரப்பட்ட பொலீஸாரே இவ்வாறு பொது மக்களின் உடைமைகளுக்கு சேதம் விளைவித்தனர் என சமய கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் டயஸ் அழகப்பெரும நேற்று பொலீஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

## இந்திய விமானம் கடத்தப்பட்டது

புதுடில்லி,டிசெ.25

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் இருந்து 174 பயணிகளுடன் புதுடில்லி நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்திய ஏயார் லைன்ஸ் விமானம் ஒன்று நேற்று மாலை ஆயுதந்தாங்கிய குழு ஒன்றினால் கடத்தப்பட்டுள்ளது.

விமானத்தைக் கடத்தல்காரர்கள் பாகிஸ்தானின் லாகூர் விமான நிலையத்தில் தரையிறக்க முயற்சித்தனர் எனவும் -

எனினும் லாகூர் விமான நிலைய அதிகாரிகள் விமான ஓடுதளத்தின் விளக்குகளை அணைத்ததைத் தொடர்ந்து விமானம் இந்தியாவின் அமிர்தசரஸ் நகரில் தரையிறக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அந்த விமானத்தில் பயணம்செய்த நாலுபேரை தாம் கொலை செய்துவிட்டதாக கடத்தல்காரர்கள் தெரிவித்துள்ளனர் என பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-7)

## கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்!



எமது வாசகர்கள், விளம்பரதாரர்கள், விநியோகஸ்தர்கள், முகவர்கள் அனைவருக்கும் 'உதயன்', 'சஞ்சீவி'யின் கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

## குடாநாட்டு தேவாலயங்களில் இன்று விசேட திருப்பலிகள்

குருநகர்,டிசெ.25

கிறிஸ்து பிறப்புத்தினமான இன்று யாழ்.மரியன்னை தேவாலயத்தில் விசேட திருப்பலிகள் யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகத்தால் ஒப்புக் கொடுக்கப்படவிருக்கின்றன.

முதலாவது திருப்பலி காலை 6.30 மணிக்கும் இரண்டாவது திருப்பலி காலை 7.30மணிக்கும் ஒப்புக்கொடுக்கப்படும்.

மாலைத்திருப்பலி 4.30மணிக்கு இடம்பெறும்.

குடாநாட்டில் உள்ள ஏனைய தேவாலயங்களிலும் இன்று காலை விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (உ-3-51)

## பெப்ரவரி மாதம் பொதுத் தேர்தல்?

கொழும்பு,டிசெ.25

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து அடுத்த வருட முற்பகுதியில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆராய்ந்து வருகின்றது.

இது தொடர்பாக முன்னணியின் முக்கியஸ்தர்கள் பூர்வாங்க ஆலோசனைகளை நடத்தியுள்ளனர் என்றும்-

ஜனாதிபதி நாடு திரும்பியதும் இறுதிமுடிவு எடுக்கப்படும் என்றும் -

முன்னணியின் பிரமுகர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

பெரும்பாலும் பெப்ரவரி கடைசியில் இந்தத் தேர்தலை நடத்தத் திட்டமிடப்படுவதாகவும் - அவர் தெரிவித்துள்ளார். (உ-3-150)

## ஐ.தே.க. - அரச ஆதரவாளர் கண்டியில் புதனன்று மோதல்!

### 14பேர் காயமடைந்தனர்

கொழும்பு,டிசெ.25

கண்டியில் இசடுகல்மடுவ என்னும் இடத்தில் ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் 14பேர் காயமடைந்தனர்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் மீது ஐ.தே.க. ஆதரவாளர்கள் கிரனேட் வீசியதாகவும் -

அதன்பின்னர்மோதல் இடம்பெற்றது என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஐ.தே.க. ஆதரவாளர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (உ-3)

## புலிகள் மேலும் 11 பேர் மரணமானதாக அறிவிப்பு

வவுனியா,டிசெ.25

தற்சமயம் மேற்கொள்ளப்பட்டுவரும் 'ஓயாதஅலைகள்-3' இராணுவ நடவடிக்கையின் போது தமது தரப்பில் மேலும் பதினொரு பேர் உயிரிழந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:

* மேஜர் கதிரொளி (தனபாலசிங்கம் சுஜீவன் - கிளிநொச்சி).
* வாகரையான் (நாகையா ஜீவநாதன் - யாழ்ப்பாணம்).
* கரும்புலி மேஜர் செழியன் (மகேந்திரராசா பாலமுரளி - யாழ்ப்பாணம்).
* வரகமூர்த்திகன் (மயில்வாகனம் செல்வநாயகம் - மட்டக்களப்பு).
* சிங்காதரன் (பரசுராமன் மயூரதன் - மட்டக்களப்பு).
* தில்லைகுமார் (தம்பிராசா பேரின்பநாயகம் - மட்டக்களப்பு)
* பேரின்பம் (முத்துக்குமாரசுவாமி மகாசிவநாராயணன் - யாழ்ப்பாணம்)
* கலைப்புலவன் (தர்மலிங்கம் வரதன் - யாழ்ப்பாணம்).
* கப்டன் தமிழ்வேந்தன் அல்லது இளவெழியன் (பாலசிங்கம் வசந்தன் - வவுனியா).
* கப்டன் புரட்சி (இராமசாமி செல்வராசன் - மன்னார்).
* லெப். பாணன் (சன்னாசி நாகராசா - கிளிநொச்சி). (உ-3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கல்விக் கல்லூரி அனுமதி

# நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் இங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.25

வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய தேசிய கல்விக் கல்லூரிகளில் 1999ஆம்ஆண்டு அனுமதி தொடர்பாகத் தகுதியான விண்ணப்பதாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 12 ஆம், 13 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் குறித்த திகதிக ளில் நேர்முகப்பரீட்சைக்குத் தவறாது சமூகமளிக்குமாறு வவுனியா தேசியகல்விக்கல்லூரியின் பீடாதிபதி செ.அழகரத்தினம் அறிவித்துள்ளார்.

ஆரம்பக்கல்வி,விஞ்ஞானம்,கணிதம் உடற்கல்வி ஆகிய பாடநெறிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் நாளை முதல் உதயனில் பகுதி பகுதியாக வெளிவரும். (ஐ-க)

# தீவகத்தில் இருந்து வருவோருக்கு கிளினிக்கில் முன்னுரிமை

வலிகாமம்தெற்கு,டிசெ.24

யாழ். போதனாவைத்தியசாலையில் கிளினிக்குக்கு வரும் தீவகத்தை சேர்ந்த நோயாளர்களுக்கு முன்னுரிமை வழங்கவைத்தியசாலை நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

குறிப்பாகநெடுந்தீவு, அனலைதீவு, புங்குடுதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய தீவக இடங்களில் இருந்து வருகை தரும் நோயாளர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

தீவகங்களில் இருந்து வருகை தரும நோயாளர்கள் பலர் தாம் திரும்பிச் செல்வதற்கேற்ற போக்குவரத்து வசதிகள் இல்லாமையை சுட்டிக் காட்டியதன் பேரில் வைத்தியசாலை நிர்வாகத்தினர் மேற்படி முடிவை செய்துள்ளனர். (ஐ-152)

## யாகப்பர் ஆலய திருப்பலி

குருநகர்,டிசெ.25

கிறிஸ்து பிறப்பு தினமான இன்று குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் முதலாம் திருப்பலி காலை5.30 மணிக்கும், இரண்டாம் திருப்பலி காலை 7.30 மணிக்கும் இடம்பெற உள்ளன.

இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்கு சென்ற குருநகர் மக்களில் பெரும்பாலானோர் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி வரத்தொடங்கியுள்ளனர். எனினும் ஆடம்பர நிகழ்வுகளோ கிறிஸ்மஸ் கரோல் ஆராதனைகளோ எதுவும் இம்முறை இப்பகுதியில் இடம்பெறவில்லை. (ஐ-51)

## சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா

உடுவில் அரவிந்தன் எழுதிய 'உணர்வுகள்' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

நூல் வெளியீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக பதிவாளர் க.குணராசாவும் மதிப்புரையினை சிற்பி சரவணபவன், செம்பியன் செல்வன் ஆகியோரும் நிகழ்த்துவர். (க)


**நாகம்ஸ்**
சுன்னாகம்
கார்த்திக், பானுப்பிரியா
நடித்த
**கோபுர வாசலிலே**
காட்சிகள்
10.30, 2.30
(புதிய நேரம்)
(72014)

அனைவருக்கும்
கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்
**ராஜா**
யாழ்ப்பாணம்
3 ஆவது வெற்றி வாரமாக
விஜய் - ஷாலினி
மற்றும் பலர்
நடித்த
**காதலுக்கு மரியாதை**
10.30, 2.00, 5.00
(C/10314)

**லிபேட்டி**
அச்சுவேலி
பிரசாந்த், கௌசல்யா
நடித்த
ஆசையில் ஓர் கடிதம்
(புதிய வெளியீடு)
காட்சிகள் -10.30 - 2.30
T.P - 070 - 212223
- 070 - 212678
(71907)

**MATHS CENTRE**
Nelliady
A/L - 2002
A/L - 99
(DAY CLASS)
கலை,
வர்த்தகப்பிரிவு
ஆரம்பம்
03-01-2000
திங்கள் 6.30 A.M.
(பழைய நேரம்)
(C/10304)

**WALK-IN INTERVIEW**
Applications are invited from Retired Government Servants with experience of Accounting. Walk-in interview on **26 th Sunday December 1999** at DCS 124/2, Palay Road, Thirunelvely from 8.a.m to 5p.m (new time)
Director
D.C.S
(72026)

**கண்ணீர் அஞ்சலி**
எமது சக ஆசிரிய பயிலுநர்
கு. பாஸ்கரனின் தாயார்
**கு. புனிதவதி**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம.
சக ஆசிரிய பயிலுநர்கள்
தேசிய கல்வியியல் கல்லூரி,
வவுனியா.
(72031)

# STP Computer World

இலவச கணனிசார்
## கருத்தரங்கு

**கருத்தரங்குத் தொடர்...**

**மிலேனியம் ஆண்டை வரவேற்கும் உங்களை STP Computer World புதியதோர் கணனி உலகிற்கு அழைத்துச் செல்வதில் பெருமையடைகின்றது.**

| | |
|---|---|
| காலம் | : 02/01/2000 → 08/01/2000 |
| நேரம் | : 9.00 AM → 1.00 PM |

இன்றைய கணனி உலகில் நிறைந்துள்ள புதிய தொழில்நுட்பங்களை எல்லாத் தரப்பினரும் ஒரு நாளிலேயே தெரிந்து கொள்ள **STP** வகுத்துள்ள ஒரு புதிய சேவைத் திட்டம்.

**இக்கருத்தரங்கில் பங்கு கொள்வதற்கான உங்கள் பதிவுகளை நேரடியாக எமது காரியாலயத்திலோ அல்லது கீழ்க்காணும் படிவ மாதிரியை நிரப்பி** Director, STP Computer World, 54A, Palaly Road, Kantharmadam, Jaffna **என்னும் முகவரிக்கு 28/12/1999 இற்குமுன் எமக்கு கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைப்பதன் மூலமாகவோ உறுதிசெய்து கொள்ளலாம்.**

**விண்ணப்பப் படிவம்:**

விண்ணப்பப் படிவம்
– கருத்தரங்கு –

முழுப்பெயர் :------------------------------------
அடையாள அட்டை இல. :------------------------------------
முகவரி :------------------------------------
------------------------------------
கல்வித் தகமை / தொழில் :------------------------------------
கலந்து கொள்ளும் திகதி (புள்ளடியிடுக)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| 02 | 03 | 04 | 05 | 06 | 07 | 08 |

மேலதிக விபரங்களுக்கு...

**STP Computer World**
54A, Palaly Road,
Kantharmadam,
Jaffrna.

TP: 2674 E-mail: stpcom@sltnet.lk

## புலமைப் பரிசில் திட்டங்கள்

STP Computer World முதலாவதாக அறிமுகப்படுத்தும் இரு வேறு வேறான பிரிவுகளைக் கொண்ட புலமைப் பரிசில் திட்டங்கள்.

பிரிவு 1 - சிறுவர்களுக்கானது
(10 வயது தொடக்கம் 16 வயதுவரை).
பிரிவு 2 - உயர்நிலை மாணவர்கள்.'.உத்தியோகஸ்தர்களிற்கானது.
(16 வயதிற்கு மேற்பட்டோர்).

இரு பிரிவு மாணவர்களுக்கும் வேறு வேறாக நடாத்தப்படும் நுண்ணறிவு, பொது அறிவு பரீட்சைகள் மூலம் திறமையடிப்படையில் தரம் பிரிக்கப்பட்டும் மாணவர்களுக்கு, தகுதியடிப்படையில் வேறு வேறான புலமைப் பரிசில்கள் வழங்கப்படும்.

**இப் பரீட்சைகளுக்கான உங்களது விண்ணப்பங்களை எமது காரியாலயத்தில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தையோ அல்லது இங்கே காணப்படும் படிவத்தையோ அல்லது படிவ மாதிரியையோ பூரணப்படுத்தி 100 /= பரீட்சைக் கட்டணத்துடன் நேரடியாக எமது காரியாலயத்தில் ஒப்படைக்கலாம். தபால்மூலமாக அனுப்ப விரும்புவோர்** Director, STP Computer World **எனப் பெயரிடப்பட்ட பணம் பெறும் நிலையம் Post Office – Jaffna எனக் குறிப்பிடப்பட்ட காசுக்கட்டளையை விண்ணப்பப்படிவத்துடன் அனுப்பிவைக்கவும்.**

**விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி**
20/01/2000

**STP Computer World**
சிறப்புப் புலமைப்பரிசில் திட்டம் - 2000
மாதிரி விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர் :..........................................
முகவரி :..........................................
..........................................
அடையாள அட்டை இலக்கம் :..........................................
பால் : ஆண் ☐ பெண் ☐
பரீட்சைக்குத் தோற்ற விரும்பும்
பிரிவு : பிரிவு1 ☐ பிரிவு2 ☐
பிறந்த திகதி :..........................................
கல்வித் தகமைகள் :..........................................
காசுக்கட்டளை இலக்கம் :..........................................
அஞ்சல் அலுவலகம் :..........................................

.......................... ..........................
திகதி கையொப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத் தீர்வுக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது; இம்முறையாவது அதற்கு தப்பாது மதிப்பு அளிக்கப்படுமா?

தென்னிலங்கையை ஒரு கலக்குக் கலக்கிய ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்துள்ளது. ஐந்து, ஆறு வாரங்களாக மிகத் தீவரமாக நிலவிய ஆரவாரமும் தணிந்தது. தமிழ்ப் பிரதேசங்களை விட தென்னிலங்கைப் பகுதிகளிலேயே



தேர்தல் சூடு பற்றிப்பிடித்திருந்தது. பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் இருவருக்கும் இடையில் நிலவிய கடும் போட்டியினால் மோதல்களும் வன்செயல்களும் வெகுதாராளமாக இடம் பெற்றன. தேர்தல்நாளுக்கு முன்னரே ஆயிரத்துக்கும் மேலான வன்செயல்கள் நாடு முழுவதிலும் நடைபெற்றிருந்தன. அவற்றில் சில கொலைகளும் அடங்கும்.

இத்தகைய மோசமான பின்னணியில் கடந்த சனிக்கிழமை இரவு கொழும்பு மாநகரசபை மைதானத்திலும் ஜாஎலயிலும் நடைபெற்ற குண்டுத் தாக்குதல்கள் நிலைமையைப் பயங்கரமாக்கியது. கொழும்புக் குண்டுவெடிப்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காயமுற்றது நாட்டில் பெரும் பதற்றத்தை உருவாக்கியது. அதனால் வன்செயல்கள் வெடிக்குமோ என்ற அச்சமும் பதற்றமும் நிலவின.

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போடும் அளவுக்கு பாதுகாப்பு நிலைமை தெற்கில் பலவீனமுறலாம் என்ற ஏக்கம் கூட பல வட்டாரங்களில் இருந்தது. ஆனால் சில மணி நேர ஊரடங்குடன் குழப்பம் எதுவும் நிகழாமல் தடுக்கப்பட்டது.

தேர்தல் காலத்துக்கு முன்பே மோதல்களும் குழப்பங்களும் அதிகஅளவில் இடம்பெற்றதால் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற வாய்ப்பில்லை என்று அவதானிகள் பலரும் கருதினர். அதேபோன்று தேர்தல் தினத்தன்று மட்டும் 297 வன்செயல்கள் நடைபெற்றன. எட்டுப்பேர் கொல்லப்பட்டனர்.

இத்தகைய சூழ்நிலையிலும் வாக்காளர்களில் 75சத வீதமானோர் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தியதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட ஆரம்பகாலத்தில் வெற்றிவாய்ப்பு சந்திரிகா குமாரதுங்கவுக்கே உண்டென மதிப்பிடப்பட்டது. இவ்வருடம் - ஏப்ரல் மாதத்தில் தென்னிலங்கையில் உள்ள ஐந்து மாகாண சபைகளுக்கு நடத்தப்பட்ட தேர்தலில் ஆளுங்கட்சி வெற்றிபெற்றது. அப்போதே சூட்டோடுசூடாக நாடாளுமன்றத் தேர்தலை அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடத்தி மீண்டும் ஆட்சி புரிபவர்களாக விளங்கவேண்டும் என்று பொதுமக்கள் ஐக்கியமுன்னணித் தலைவர்கள் அந்தரங்கமாக முடிவு செய்திருந்தனர். இதனை

## உள்ளும் புறமும்

குறுமுனி

மணந்து பிடித்துப் பத்திரிகைகள் செய்திகளை வெளியிட்டபோது அரச பிரமுகர்கள் மறுத்துப் பேசவும் செய்தனர்.

அந்தச் செய்திகளால் உண்டான ஆர்வமும் பரபரப்பும் சற்று அடங்கியிருந்தவேளை, திடீரென ஒக்ரோபர் 20ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரகடனத்தை சந்திரிகா குமாரதுங்கா வெளியிட்டார்.

கிடைத்துள்ள சந்தர்ப்பத்தைக் கைவிட்டால் மாதமாக ஆக தமது கட்சிக்குள்ள ஆதரவு சரிந்து போய்விடலாம் என்று ஆளுந்தரப்பினர் கருதினர். ஜூன் மாதத்தில் நடைபெற்ற தென் மாகாண சபைத் தேர்தலில் ஆளுங்கட்சி சொற்ப வாக்குகளால் மட்டுமே வென்றது. அதனாலேயே நாடாளுமன்ற அல்லது ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடிவுசெய்தனர். ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் வெற்றி வாய்ப்பு அதிகம் என்று கணக்குப் பார்த்தே அதற்கான பிரகடனம் வெளியிடப்பட்டது.

அந்த வகையில் ஆரம்பத்தில் ஆளுங்கட்சி வேட்பாளரான சந்திரிகாவே வெல்வார் என்ற ஓர் அலை வீசியது. எனினும் தென்னிலங்கையிலேயே தமக்குள்ள ஆதரவு குறையலாம் என்ற மன அச்சம் அவர்களுக்கு இருந்தது. அதனாலேயே தமது பொறுப்பில் உள்ள ஊடகங்களை எதிர்க்கட்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்வதற்கு முழு அளவில் - நூறு சதவீதம் - பயன்படுத்தினர்.

தமது கொள்கைகள்; சாதனைகள், வாக்குறுதிகளை முதன்மைப்படுத்தியதைவிட, ஐக்கிய தேசியக்கட்சி மீதும் ரணில் விக்கிரமசிங்கா மீதும் சேறுபூசும் பிரசாரமே முதன்மைப்படுத்தப்பட்டது. அடுத்தவரின் தோல்வி மீதே, தான் வெற்றிகாண முடியும் என்ற உத்தி நிறையவே கையாளப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்காவையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் சம்பந்தப்படுத்திப் பிரசாரம் செய்வதன் மூலம், சிங்கள வாக்காளர்களின் ஆதரவைத் திரட்டும் நோக்குடனும் ஆளுங்கட்சி தனது பிரசாரத்தை முடுக்கிவிட்டிருந்தது.

எனினும் தேர்தலுக்கு எட்டுப் பத்து நாள்களுக்கு முன்னர் தென்னிலங்கையின் கிராமப் பகுதிகளிலும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் ஆதரவு அலைவீசத்தொடங்கியது. அதனைப் பார்த்து ஆளுந்தரப்பு தனது பிரசாரத்தை மேலும் முடுக்கியது.

தமிழ் மக்களில் பெரும்பாலானோர் ரணிலுக்கே வாக்களிப்பர் என்ற நிலை தோன்றியதும் சந்திரிகா அலை, ரணில் அலையாகப் பெரியளவில் மாறியது. இந்தவேளையில்தான் கொழும்பு மாநகர வளாகக் குண்டுவெடிப்பும், ஜாஎலக் குண்டுவெடிப்பும் நடைபெற்றன.

கொழும்புக் குண்டுவெடிப்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா காயமுற்றார். அதன் விளைவாக அவருக்கு அனுதாப வாக்குகள் கிடைத்ததாலேயே வெற்றி வாய்ப்பு அதிகமாகியது என்று பொதுவாக நம்பப்பட்டாலும் அவதானிகள் அதனை முழுதாக ஏற்பதாக இல்லை. கடைசியாக நடைபெற்ற ஐந்து மாகாண சபைகளுக்குமான தேர்தலிலும் ஆளும் கட்சியின் வெற்றி விளிம்பு நிலையிலேயே இருந்தது. அதனால் அனுதாபவாக்குகள் அமோகமாக விழவில்லை என்றே கருத இடமுண்டு. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 62.2 சதவீத வாக்குகளால் வெற்றி ஈட்டிய சந்திரிகா குமாரதுங்க இம்முறை 51.12 சதவீத வாக்குகளையே பெற்றார். ரணில் விக்கிரமசிங்காவுக்கு 42.71 சதவீத வாக்குகள் கிடைத்தன.

**இனப்பிரச்சினை விவகாரத்தில் சந்திரிகா மட்டுமன்றி ரணிலும் புதிய அணுகுமுறையைக் கையாள வேண்டும்**

### ஏமாற்றம் பிரதிபலித்தது

சென்ற தடவை தமிழ் மக்கள் தமது பிரச்சினைக்குச் சந்திரிகா தீர்வொன்றைக் காண்பார் என்று நம்பியே அவருக்கு வாக்களித்தனர். ஆனால் அவரது காலத்தில்தான் அவர்கள் அதிக இன்னல்களையும், இழப்புக்களையும், தொல்லைகளையும் அனுபவிக்க நேர்ந்தது. அதனால் அவர்கள் தமது ஏமாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அவருக்கு வாக்களிக்கவில்லை.

ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதித் தேர்தலில் புதிய வேட்பாளர். இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டுகிறார். முந்திய ஐ.தே. கட்சி தலைவர்களும் தமிழர்களை ஏமாற்றியவர்கள்தான். எனினும் இவர் புதியவராக இருப்பதாலும், சந்திரிகா ஏமாற்றிவிட்டதாலும் அவருக்கு ஒரு சந்தர்ப்பம் அளித்துப் பார்க்கத் தமிழ் மக்கள் விரும்பியதில் ஆச்சரியமுற எதுவுமில்லை. அதனால் யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த ஏனைய தமிழ் மாவட்டங்களிலும் கொழும்பு மாவட்டத்திலும் ரணிலுக்கே அதிக வாக்குகளை அளித்தனர்.

தம்மை இம்முறை தமிழ் மக்கள் ஆதரிக்கவில்லை என்பதால் அவர்கள் மீதான கெடுபிடிகளை சந்திரிகா மேலும் அதிகரிக்கக் கூடும் என்று, தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கும்போதே தமிழர்கள் தமக்குள் எண்ணிக் கொண்டனர். வடக்கு - கிழக்கில் இராணுவச் செயற்பாடுகளை அதிகரிக்கவும் அவர் துணியலாம் என்று நினைக்கின்றனர்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்பு வழங்காமையினாலேயே தாம் 1994இல் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை என்று ஜனாதிபதித் தேர்தல் குறித்து அறிவிப்பதற்கு முன்னரே சந்திரிகா தமது பேச்சுக்களில் கூறிவந்தார். அதனால் இனப் பிரச்சினைக்கு அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத் தீர்வு, - நிரந்தரத் தீர்வு - காண்பதற்கு தமக்கு ஆணை தருமாறு கேட்டே அவர் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினார்.

மேலும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சமாதானப் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்கத் தமக்கு ஆதரவு தருமாறு அவர் மக்களைக் கேட்டிருந்தார். அவ்வாறிருக்க, அவர் தொடர்ந்தும் இராணுவ வழியையே நாட முனைந்தாரானால், இரண்டாம் முறையும் மக்களை [illegible] மூன்றாவது தடவை ஜனாதிபதியாகும் வாய்ப்பு இப்போதைய அரசமைப்பின் பிரகாரம் இல்லையென்பதால் இம்முறையும் தான் நினைத்தவாறு நடந்துகொண்டால், காலத்தைக் கடத்தினால் யார்தான் என்ன செய்யமுடியும் என்ற அவநம்பிக்கையான பேச்சும் தமிழ்மக்கள் மத்தியில் உலவுகிறது.

தமிழ் மக்களின் இத்தகைய அச்சங்களும் அவநம்பிக்கைகளும் ஜனாதிபதியின் காதில் விழவே செய்யும். அவர் இந்தமுறையாவது இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் நேர்மையாகவும் உண்மையாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

தம்மை மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்தால், இனப்பிரச்சினையைத் தீர்க்கும் விதத்தில் அதிகாரப்பரவல் திட்டம் உள்ளிட்ட புதிய அரசமைப்பைக் கொண்டுவர வழிவகை செய்யப் போவதாகத் தேர்தல் கூட்டங்களில் சந்திரிகா பேசித்திரிந்தார்.

கடந்த புதன்கிழமை புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் மக்களுக்கு நன்றி தெரிவித்துப்பேசும் போதும், ஜனாதிபதி "எனது ஆட்சிக் காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன் என்று உறுதியாக நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்" எனச்சொன்னார்.

அத்தோடு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவும் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டவும் தம்முடன் இணைந்து பணியாற்ற வருமாறு எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைப் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டுவரச் சகலரும் பங்களிப்புச்செய்யவேண்டும். தமிழ் மக்கள் அவருக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் - என்பதும் புதிய ஜனாதிபதியான பின்னர் சந்திரிகாவின் நிலைப்பாடாகியுள்ளது.

அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டும் என்பதனையே தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன; வலியுறுத்துகின்றன. ஜனாதிபதித்தேர்தலில் பிராதான வேட்பாளர்களாக விளங்கிய சநந்திரிகாவும், ரணிலும் தாம் பதவிக்கு வந்தால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகவும், விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தி போரை முடிவுக்குக்கொண்டுவருவதாகவும் தேர்தல் கூட்டங்களில் பேசினார்கள்.

### ஆக்கபூர்வ செயற்பாடு தேவை

ஆகையால், சந்திரிகா தனது உறுதி மொழிகளை ஆக்கப்பூர்வமாகச் செயற்படுத்த உடனடியாகவே நடவடிக்கை ஆரம்பிக்கவேண்டும். வேறு எந்தப்பணிக்கும் அன்றி அதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் ஆணைகேட்ட விடயத்துக்கு முன்னுரிமை கொடுத்து செயற்படுவதில், சந்திரிகா எந்தளவு வேகம் காட்டுகிறார் என்பதனை மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதில் அக்கறைகாட்டவேண்டும். தமிழ் மக்கள் தமக்களித்த அமோக ஆதரவை மனதிற்கொண்டு போரை விரைவில் நிறுத்தவும், நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணவும் அரசாங்கத்துக்கு தூண்டுதல், உந்துதல் அளிக்கவேண்டும்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் சந்திரிகாவுக்கு எந்தளவில் பொறுப்பும் கடமையும் உண்டோ அதேஅளவு பொறுப்பும் கடமையும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் உண்டு. சந்திரிகாவுக்கு 51.12 வீதம் வாக்குகள் கிடைத்தவேளை தமக்கு 47.71 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளன என்பதனை ரணில் மனதிற்கொள்ளவேண்டும். ஆட்சிக்கு வரமுடியாமல் வாக்கு எண்ணிக்கை தடுத்ததுவிட்டபோதிலும் இந்த நாட்டில் மக்கள் ஆதரவுபெற்ற இரண்டாவது தலைவர் என்பதனை கருத்திற்கொண்டு செயற்படவேண்டும்.

மிகக் குறிப்பாக தமிழ் மக்கள் தமக்கு

**புத்தாயிரம் ஆண்டிலாவது புதிய சகாப்தம் தோன்றட்டும்**

அளித்த ஆதரவை பொருட்படுத்திப் பணியாற்ற வேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விவகாரத்தில் முன்னரைப்போல முரண்பட்டுக் கொண்டு, முரண்டுபிடித்து கொண்டு நிற்கக் கூடாது.

சந்திரிகா தம்மைத் தூற்றினார் என்பதாலோ தமக்கிடையே அரசியல் முரண்பாடுகள் உள்ளன என்பதாலோ இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விவகாரத்தில் தூர விலகி நிற்கக் கூடாது. அராசங்கத்துக்கு இடித்துரைத்து சமாதானத் தீர்வு ஒன்றைக்காண்பதற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

எதிர்க்கட்சி என்பதால் அரசின் நடவடிக்கைகளை எதிர்த்தே ஆகவேண்டும் என்றில்லாமல், இன விவகாரம் தேசியப் பிரச்சினை என்பதனை உணர்ந்து, அதனைத்தீர்த்து வைத்தால் மட்டுமே நாட்டினை அழிவிலிருந்து காப்பாற்றலாம் என்பதனை கருத்தில் எடுத்துச் செயற்படவேண்டும். இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில் அரசியல் லாபம் தேடும் நீண்டகால வழக்கத்தை மாற்றி புதிய அணுகு முறையை கைக்கொள்ள வேண்டும்.

புத்தாயிரமாம் காலத்திலாவது இந்த நாட்டில்



அமைதியும் சமாதானமும் பிறக்க அரசு மட்டுமன்றி எதிர்க்கட்சியும் உழைக்க முன்வரவேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு எதிர்கட்சியே காரணமாக, தடையாக இருக்கிறது. என்று புதிய ஜனாதிபதியும் அவரது கட்சியினரும் மீண்டும் கூறுவதற்கு இடம் வைக்காமல் ஐக்கிய தேசியக்கட்சியும் அதன் தலைவரும் செயற்படவேண்டும்.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கி, இந்த நாட்டின் சம பிரஜைகளாக, கெளரவத்துடனும் சுயமரியாதையுடனும் வாழ வழிவகுக்கும். நீதியான தீர்வு ஒன்றை உருவாக்குவதற்கு ஐக்கிய தேசியக்கட்சிக்கும் பெரும் பங்குண்டு.

### ரணிலுக்கும் பங்குண்டு

எப்போதும் இல்லாதவாறு செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் அதனை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது. ஆகவே ஐக்கிய தேசியக்க்கட்சித் தலைவர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தை புதிய கோணத்தில் நோக்கி புதிய அணுகுமுறையை கைக்கொள்ளவேண்டும்.

தமிழர்களின் உரிமைகள், நலன்கள் பேணப்பட்டு நீதியுடன் கூடிய சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஐ.தே.கட்சிக்கும் பொறுப்புண்டு. புத்தாயிரமாம் ஆண்டில் புதிய சிந்தனை மலரட்டும்.

(இந்தப் பத்தியை எழுதி முடித்த வேளை, போரை முடிவுக்குக் கொண்டுவர ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பாரானால் தாம் அவருக்கு ஆதரவு வழங்குவார் என்றும், சமாதானத்தை ஏற்படுத்த உறுதியான நடவடிக்கைகள் எடுக்கபட்டால் அவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்க தயார் என்றும் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நல்ல சகுனம் இது!)

* * *

### குடாநாட்டில்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஜனாதிபதித் தேர்தல் காற்று மிக மெல்லியதாக இரண்டு அல்லது மூன்று கிழமைகளுக்கு முன்னரே வீசத் தொடங்கியது. இது குறித்து இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இங்கு தேர்தல் பிரசாரக்கூட்டம் எதுவும் நடத்தப்படவில்லை. சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள், கொடிகள் என்பனவே பிரசார சாதனங்களாக அமைந்திருந்தன. வேறு எந்த வேட்பாளர்களுக்கும் அல்லாமல் பிரதான கட்சிகளின் - ஆளுங்கட்சியினதும் எதிர்க்கட்சியினதும் - வேட்பாளர்களுக்கு ஆதரவு தேடுவதிலேயே போட்டி நிலவியது. சம்பந்தப்பட்ட இரு கட்சிகளினதும் அமைப்பாளர்களோ ஆதரவாளர்களோ அன்றி தமிழ்கட்சிகள் இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு ஆதரவு தேடுவதில் போட்டிபோட்டு மோதிக்கொண்டனர். ஒரு பகுதியினர் ஒட்டிய சுவரொட்டியை இன்னொரு பகுதியினர் கிழிப்பதும் மறுசாரார் கட்டிய கொடியை அடுத்தவர்கள் அறுத்து எறிவதுமான இந்தப்போட்டி உச்சக்கட்டத்தை அடைந்திருந்தது.

( 6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி - கிறிஸ்மஸ் சிறப்பிதழ்



## நிரந்தரத் தீர்வினைக் காண முன்வாருங்கள்

1999ஆம் ஆண்டு கிறிஸ்மஸ்விழா விற்கான செய்தியினை 'உதயன்' பத்திரிகையின் வாசக அன்பர்களுக்கு வழங்குகின்ற இவ்வேளையில் ஒரு புறம் புதிய ஜனாதிபதித் தேர்வு முடிவடைந்துள்ளது. மறுபுறம் போருக்கான கார்மேகங்கள் சூழ்ந்துள்ளன. தமிழ் மக்கள் அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்வில் உள்ளனர்.

### யாழ். ஆயரின் நத்தார் செய்தி

கடந்த 16 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் கொடிய போரினால் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துள்ளனர். இழப்புக்களும், இடம்பெயர்வுகளும் இறப்புக்களும் அவர்கள் வாழ்வின் அன்றாட நிகழ்வாகிவிட்டன. இதோ அமைதி வருகிறது, சமாதானம் வருகிறது, பேச்சுவார்த்தை வருகிறது, இவர் வழியாக எமக்கு விடிவு வருமெனப் பல தடவைகள், பல தலைவர்களையும் நம்பி நம்பி ஏமாந்து போய்விட்டார்கள். நாமும் கூட பலதடவைகளில் தமிழ் மக்களுக்கு விடிவுகாலம் வரும் என்ற நம்பிக்கையோடு குரல் கொடுத்துக் கொண்டு வந்தோம். பல தலைவர்களிடமும் வேண்டுகோள் விடுத்தோம். மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம் வழியாக இனப்பிரச்சினைக்கான ஒரு நிரந்தரத் தீர்வைக்காண முன்வரும்படி போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினர்க்கும் அழைப்பு விடுத்தோம்.

2000 ஆண்டு புலருகின்றபோது ஆண்டவர் இயேசுவின் பிறப்பின் யூபிலியினைக் கொண்டாடுகின்ற வேளையில் இந்த அழைப்பினை இரு தரப்பினர்க்கும் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம். யூபிலி ஆண்டு முழு மனித விடுதலையின் ஆண்டு என்பதனைக் கருத்தில்கொண்டு இரு தரப்பினரும் குறிப்பாக மீளவும் அதிகாரத்தைப் பெற்றுள்ள ஜனாதிபதியும் கடந்தகால சம்பவங்களையும் பாதிப்புக்களையும் மன்னித்து, மறந்து விசேடமாகத் தமிழ் மக்களின் முழு மனித விடுதலைக்கு உழைக்க வேண்டுமென அழைப்பு விடுக்கிறோம்.

இறைவன் மனிதனானான் என்ற மாபெரும் வரலாற்று நிகழ்வின் 2000 ஆண்டு நிறைவினை யூபிலி விழாவாகக் கொண்டாடுகின்ற இவ்வேளையில் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்ய வந்த கிறிஸ்து எம் மண்ணிலும் இவ் விடுதலையைக் கொணர ஆசிக்கிறோம்; வாழ்த்துகிறோம்!

உதயன் ஆசிரியர், பணியாளர், வாசக அன்பர்கள் அனைவர்க்கும் நத்தார் புதுவருட வாழ்த்துக்களை அன்புடன் தெரிவிக்கிறோம்.

**இ. தோமஸ்சவுந்தரநாயகம்**
**யாழ். ஆயர்**

### பரமனே பிறந்து வா

விண்ணில் பேரொளி - விண்மீன் ஒளிர
விந்தை கண்டு உலகோர் வியக்க
மண்ணில் மாபரன் மனுவுரு எடுக்க
மாசில்லாக் கன்னி கருவுற லானாள்

எண்ணில் அடங்கா இன்பம் பெருகிட
மண்ணும் விண்ணும் மகிழ்ந்து போற்றிட
தன்னில் தவத்திரு இறையின் மைந்தன்
மண்ணில் உதித்தான் மாபவம் போக்கவே

கண்ணில் ஒளித்ரும் கண்மணியே வாராய்
போர் சூழும் எம் மண்ணை கண்கொண்டு பாராய்
ஆண்டில் ஈராயிரம் அமைதியுடன் பிறக்க
பண்ணில் தமிழ் இசைத்தோம் பரமனே வருக!

**கவிதா ஜெயப்பிரகாசம்.**


என்றும் எம் இனிய வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும்
கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.

வானவில்லின் வர்ண ஜாலங்கள்
அத்தனையும்
கோலம் சில்க்ஸின் பட்டாடைகளில்



கோலம் சில்க்ஸ்

166, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(C/10278)



லைடன் வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும்
நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்.

லைடன் புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P - 2381

(C/10272)



யேசு பாலகனின் பிறப்போடு எங்கள் வாழ்விலும் புதிய ஒளிபிறக்க
எல்லோருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துகள்



ஆள்பாதி ஆடை பாதி என அன்று
முதுமொழி பிறந்தது எனினும் ஆள்பாதி
மகாநதியின் அழகிய ஆடைகள் பாதி என
இன்று புதுமொழியே பிறந்து விட்டது.

மகாநதி புடைவையகம்

(முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான ஸ்தாபனம்)

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
T.P - 2552

4, நவீன சந்தை,
சாவகச்சேரி.

சாரி பிளவுஸ் துணிவகைகளுக்கு பிரத்தியேக காட்சியறைகள

16, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.

1, நவீன சந்தை (மேல்மாடி)
சாவகச்சேரி.

(C/10274)



எமது அன்பிற்கினிய வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும் எமது இனிய
நத்தார் வாழ்த்துக்கள்.



SILVER SHIELD தயாரிப்புக்களான
* சொக்ஸ் வகைகள்
* நூல் வகைகள்
* எலாஸ்ரிக், பேனா, ஸிப்
* பெனியன்கள்
* CURVFOAM & CARINA பிறேசியர்கள்
* பிளாஸ்ரிக் சாமான்கள்
* சகல பாடசாலை உபகரணங்கள்

இன்னும் பல
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.
இளக்குமதி செய்யப்பட்ட
பிறந்தநாள், திருமண வாழ்த்து மடல்கள்,
அழைப்பிதழ்கள் விற்பனைக்குண்டு.

லிங்கன் ஸ்ரோர்ஸ்

168, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C/10269)



அருள் தீபமே, அணையா விளக்கே! தமிழர் எம் வாழ்வில் ஒளியேற்ற வா!
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துகள்

புன்னகை சிந்திடும் பெண்ணுக்கு மின்னிடும் சாரங்காவின் பொன்னகை பேரழகு

சாரங்கா நகைமாடம்

(இணையகம்)
177/4, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
T.P - 2480



சிவா நகை மாடம்
(கிளையகம்)
யாழ். வீதி, சாவகச்சேரி

அருள் முருகன் நகையகம்
(தலைமையகம்)
96, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/10277)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சீவி - கிறிஸ்மஸ் சிறப்பிதழ்


வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்.

கண்ணைக் கவரும் கவர்ச்சி அழகு விநாயகர் புடைவையகத்தின் புடைவைகளில் இழையோடிக் கொண்டிருக்கிறது. ஒரு முறை வந்து பாருங்கேளேன், வியந்து போவீர்கள்!



**விநாயகர் புடைவையகம்**

62A, நவீன சந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(C/10273)


## யேசுவைப் பணிவோருக்கு சாந்தி, சமாதானம், நிம்மதி

உதயன் வாசகர்களுக்கும் மற்றும் அன்பர்களுக்கும் கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துதல்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த வருடம் கிறிஸ்மஸ் தினமும் புத்தாண்டு தினமும், புதிய ஆயிரம் வருடத்தின் தொடக்கமாகையால் முக்கியத்துவம்பெறுகின்றன.

வார்த்தை அல்லது தர்மம் ஊனுடல் எடுத்து உலகமக்களோடு வாழ வந்தார். பாவவிமோசனத்திற்கு தம்மையே அர்ப்பணிக்க வந்தார் என்று நாம் குதூகலம் அடைகின்றோம்.

இன்று நமது பிரதேசத்தில் போர்ச் சத்தங்கள் அடங்கவில்லை. நிம்மதியைத் தேடி மனிதன் அலைகிறான். அவசரம், ஓட்டம், பொருள்தேடல், பாதுகாப்புத்தேடல் என்பதிலேயே காலத்தைக்கழிக்கின்றான். இயேசுபிரான் பிறந்த பொழுதும் இதே சூழல் தான் பலஸ்தீன தேசத்திலும் நிலவியது.

மூன்று ஞானிகளும் ஒரு சில இடையர்களுமே இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரைப் பணிந்து கொள்ளவந்தார்கள். அவர்களுக்கு உலகம் வழங்க முடியாத சாந்தி, சமாதானம், நிம்மதி கிடைத்தது. மற்றவர்கள் பொருளைத் தேடி புகழைத்தேடி ஓடினார்கள். இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

இறைவனிடம் செல்பவர்கள் எந்தச் சூழலிலும் மகிழ்ச்சி, குதூகலம் பேரின்பம் என்பவற்றை அடைவார்கள். கடவுள்மேல் நம்பிக்கை வைக்கவேண்டியதே இன்று நாம் செய்யவேண்டிய கடமை. அவரே நமக்கு விமோசனம் அளிப்பார்.

**எஸ் - ஜெபநேசன்.**
ஆயர்,தென்னிந்தியத் திருச்சபை


வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்.

PREPARED UNDER HYGIENIC METHOD SPECIALLY FOR PHYSICIANS AND DOMESTIC PURPOSES

AVAILABLE AT:

MRS.S.PONNUCHAMY

PARIMALA STORES
26A, MANIPAY RD,
JAFFNA.

V.S.P SPECIAL LUNCH OIL

SPECIAL V.S.P. GINGELLY OIL

சுகாதார முறையில் உணவிற்கும் வைத்தியர்களுக்கும் விசேஷமாக தயாரிக்கப்பட்டது சுத்தமான வி.எஸ்.பி. நல்லெண்ணெய

தயாரிப்பாளரும் ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:
திருமதி சி.பொன்னுச்சாமி

யா 01-776

(C/10271)



அன்பான வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துகள்.

Bata, D.S.I, றப்பர், சீபா, கீற்றோ சோடி இந்தியன் சாண்டில் சிலிப்பர் மற்றும் வெள்ளை, கறுப்பு சூ வகைகள் யாவும் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்யப் புதுப் பொலிவுடன்



**கணபதி சூ பலஸ்**

32, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/10279)



விண்ணுலகில் நின்ற தேவன் எழுந்து வருகிறார்
நல்ல மனிதர் நடுவில் குழந்தை வடிவம் பெறுகிறார்
என்றும் அவர் நம் வாழ்வில் நல்லருள் புரிவாராக.



அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்.

பார்ப்பவர்களை பரவசமடைய வைக்கும் பட்டாடைகள் அத்தனையும் எங்களிடமுண்டு.

**ராகம்ஸ் பட்டுச்சோலை**

இல.24, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(C/10276)



வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

சூட்டிங், சேட்டிங், ரெடிமேட் ஆடைகளை வேறு எங்கும் காணமுடியாத அளவில் புதுப் புது டிசைன்களில் மலையெனக் குவித்துள்ளோம். உங்கள் ரசனையின் புதிய எல்லையைத் தொட இது எங்களின் நுழை முகம்



**சங்கமம் ரெக்ஸ்**

(ஜனரஞ்சகமான ஜவுளி மாளிகை)
54A, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

(C/10275)



எமது அன்பான வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாயிரமாம் ஆண்டு வாழ்த்துகள்



*மங்கிடும் கண்களுக்கு பொங்கிடும் பார்வை அளிப்பவர்கள்.

*விழுந்த பற்களுக்கு புதிய பற்கள் பொருத்தவும் மிதந்த பற்களுக்கு கிளிப் போடவும் தன்னிகரில்லா தனிப் பெரும் ஸ்தாபனம்.

*பால்மா, மருந்து வகைகள் பெற்றுக் கொள்ளவும் உள்நாட்டு வெளிநாட்டு தொலைத் தொடர்புகளுக்கும் என்றென்றும் நினைவுக்கு வரவேண்டியவர்கள்.

**எரிக்கணேஷ்**

முக்குக் கண்ணாடி அகமும் மருந்தகமும்

566, 564 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P - 2486

C/10270


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானத் தீர்வுக்கு....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டில் பதற்ற நிலைமை தோன்றிய போதிலும் கூட இந்தப்பிரசாரப்போட்டி நின்றதாக இல்லை. ஆனால் இந்தப்பிரசாரப் போட்டி வாக்காளர்களை குடாநாட்டில் பெரிதும் கவர்ந்ததாக இல்லை. தேர்தல் பெறுபேறுகள் அதனைத் தெளிவாக நிரூபிக்கின்றன. 1,11,568 வாக்காளர்களே தேர்தலில் பங்கேற்றுள்ளார்கள். அதாவது 18.5% வாக்காளரே குடாநாட்டில் வாக்களிப்பதில் ஆர்வம் காட்டியுள்ளனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐக்கிய தேசியிக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரசிங்கவுக்கே கூடுதல் வாக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதாவது குடாநாட்டில் தேர்தல் அலை அந்தப்பக்கமே வீசிக்கொண்டிருந்தது. எனினும் ஆளுங்கட்சி வேட்பாளர் சந்திரிகாவுக்கு 52,043 வாக்குகளும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 48,005 வாக்குகளும் கிடைத்தன. ஐ.தே.க வேட்பாளரைவிட ஆளுங் கட்சி வேட்பாளருக்கு 4,038 வாக்குகள் கிடைத்தன.

ரணில் பதவிக்குவந்தால் நிலைமை மாறக்கூடும்; அத்தகைய வேளையில் தமக்குப் பல பாதிப்புக்கள் ஏற்படலாம் என்று கருதியவர்களும், ஜனாதிபதி அம்மையார் குடாநாட்டுக்கு வழங்கிய மின்சாரம், தொலைபேசி மற்றும் சில வசதிகளுக்கு நன்றி தெரிவிக்கவேண்டும் என்று கருதியவர்களும் அவருக்கு வாக்களித்து இருப்பர் என்று அவதானிகள் கருதுகின்றார்கள். இவர்களைவிட மூன்றாவது ஒரு வகையினரும் ஆளுங்கட்சி வேட்பாளருக்கு வாக்களித்தாக பரவலாகப் பேசப்படுகிறது.

குடாநாட்டில் பெரும்பாலான வாக்களிப்பு நிலையங்களில் மு.ப 9.30, 10.00 மணிக்குப்பின்னரே வாக்காளர்கள் வாக்குச் சாவடிகளில் கூட்டமாகக் குழுமியதை காணமுடிந்தது. ஆனால் வாக்களிப்பதற்கான ஆரம்ப நேரம் காலை 7 மணியாகும்.

வாக்காளர் பலரும் வாக்களிப்பது குறித்து போதிய விளக்கம் இல்லாதிருந்தார்கள் என்று கிராமப்பகுதிகளில் பணியாற்றிய உத்தியோகத்தர்கள் மூலம் தெரியவந்தது. 11 தேர்தல் தொகுதிகளிலும் அளிக்கப்பட்ட வாக்குகளில் 5,981 வாக்குகள் செல்லுபடியற்றனவாகக் காணப்பட்டன.

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 6,12,770. இவற்றில் குடாநாட்டுக்குரிய பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் மூன்று அல்லது மூன்றரை லட்சம் என்றே மதிப்பிடப்படுகின்றது. இறந்தவர்களுக்கும், அந்தந்த வீடுகளில் இல்லாதவர்களுக்கும் கூட வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. இடம்மாறி வசித்த பலருக்கு இரண்டு வாக்காளர் அட்டைகளும் கிடைத்தன.

இத்தகைய ஒரு பின்னணியில் குடாநாட்டில் கள்ளவாக்குப் போடுதல் தராளாமாகவே நடைபெறும் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. இங்கு வந்திருந்த சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்களும் உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பாளர்களும் இதை நன்கு அறிந்திருந்தனர். எனினும் அவர்களால் கள்ளவாக்குப் போடுதலை பெரிதாகத் தடுக்கமுடியாது என்பது தெரிந்தவிடயமே.

கூடுதல் வாக்காளர் அட்டைகளும், வாக்குச்சீட்டுகளும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டது பதில் தேர்தல் ஆணையாளருக்கும் தெரியும். அடையாளஅட்டைகளைக் காட்டியே வாக்களிக்கவேண்டும் என்று விதித்திருந்தால் கள்ளவாக்குப் போடுவதை ஓரளவு தடுத்திருக்கலாம். அவ்வாறு செய்யவில்லை.

யாழ்ப்பாண நகரில் உள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் சுமார் 10 மணிக்கு வாக்களிக்கச் சென்ற ஒருவரிடம் அவரது வாக்கு ஏற்கனவே காலையில் பதிவு செய்யப்பட்டுவிட்டதாக உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். அவரது வேண்டுகோளின்படி வாக்கு ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு விட்டது என்ற குறிப்பு வாக்காளர் அட்டையில் எழுதிக் கொடுக்கப்பட்டிருந்தது.

தீவுப்பகுதியில் பெருமளவு கள்ள வாக்குப்போடும் படலம் இடம்பெறும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட போதும் அவ்வாறு இடம்பெறவில்லை. சர்வதேச மற்றும் உள்ளூர் கண்காணிப்பாளர்கள் பலரும் தீவுப்பகுதி வாக்களிப்பு நிலையங்களுக்கு அடிக்கடி விஜயம் செய்தமையே காரணம் எனச் சொல்லப்படுகிறது.

வலிகாமம் பிரதேசத்திலும் தென்மராட்சியிலும் கள்ள வாக்குப்போடுதல் தாராளமாக நடைபெற்றதாகச் சொல்லப்படுகிறது. மிருசுவில் பகுதியிலுள்ள வாக்களிப்பு நிலையம் ஒன்றில் இந்த மாத ஆரம்பத்தில் ஜி.சீ.ஈ (சா/தா) பரீட்சைக்குத் தோற்றிய மாணவன் ஒருவன் (16 வயது) வாக்காளர் அட்டையுடன் வந்து வசமாக மாட்டிக் கொண்டார்.

காங்கேசன்துறைத் தொகுதியில், மானிப்பாய் தொகுதி, மற்றும் பல தொகுதிகளில் ஒழுங்குசெய்யப்பட்ட ரீதியில் கள்ள வாக்குகள் போடப்பட்டதாகக் கூறப்படுகிறது.

வாக்காளர்களில் சிலர் வாக்களிப்பதற்கான அடையாளங்களை இட்டதுடன் அவற்றில் சில வாசங்களை எழுதியதாக வாக்கு எண்ணும் பணியில் கடமையாற்றியவர்கள் மூலம் தெரியவந்தது. அவற்றில் சில வருமாறு :-

* ஒருத்தருமே எங்களுக்கு வேண்டாம்.
* அம்மாவை விட அப்பா நல்லம்.
* புலி கெதியாய் வரும்.
* பல வாக்குச்சீட்டுகளில் குறிப்பிட்ட ஒரு சின்னத்துக்குக் கீழ் தூசண வார்த்தைகளும் எழுதப்பட்டிருந்தனவாம்.

தேர்தல் தினத்திற்கு அடுத்த நாள் புதன்கிழமை சீருடையினர் பலரும் ரணிலே தேர்தலில் வெல்லுவார் என்றும் அதனால் தமக்கு நன்மை கிடைக்கும் என்றவாறு தமக்குள் பேசிக்கொண்டனராம். எனினும் நண்பகலில் தேர்தல் முடிவுகள் வேறுவிதமாக அமைந்தபோது கவலை அடைந்தவர்களாகக் காணப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சிக்காலத்தில் தாங்கள் பலாலித்தளத்திற்கு உள்ளேயே இருந்தது குறித்தும், இப்போது களத்தில் நின்று உயிரைப் பணயம் வைக்கும் இந்நிலை இருப்பது குறித்தும் அவர்கள் பிரஸ்தாபித்தார்கள்.

குடாநாட்டில் சந்திரிகாவுக்கு அதிக வாக்குகள் கிடைத்த போதிலும் வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் ஐ.தே.க. வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்காவுக்கே அதிகவாக்குகள் கிடைத்தன. ஜனாதிபதி தேர்தல் மூலம் ஒரு மாற்றம் வரவேண்டும். ரணில் புதியதலைவ்ர் அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்து பார்ப்போம் என்று கருதி தமிழ் மாவட்டங்களில் வாக்குகள் அள்ளிப்போடப்பட்டன. ஆனால் பெறுபேறு எதிர்பார்த்ததை விட வேறுவிதமாக அமைந்து விட்டது. சந்திரிகாவே மீண்டும் ஜனாதிபதியாகியுள்ளது.

நல்லனவற்றைச் செய்வார் என்று நம்புவோமாக. *

# மானிப்பாய்ப் பகுதியில் 306 பேர் தஞ்சம்

குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோரில் இதுவரை 74குடும்பங்களைச் சேர்ந்த 306 பேர் மானிப்பாய் பிரதேசத்தில் உள்ள தமது உறவினர் வீடுகளில் தங்கி உள்ளனர்.

மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய் தெற்கு கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள கூழாவடி, கட்டுடை, சாவற்காடு, மானிப்பாய்,ஆனைக்கோட்டை,உச்சியோடை, மானிப்பாய் - உடுவில் வீதி ஆகிய இடங்களிலேயே இவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் தங்கி உள்ளனர்.

குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் இடம்பெற்று வரும் ஷெல் வீச்சுகளினால் பாதுகாப்புக் கருதி இம்மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

சாவகச்சேரி, கரையூர், பாஷையூர், குருநகர், கொழும்புத்துறை போன்ற இடங்களில் உள்ள மக்களே பெரும்பாலும் இடம்பெயர்ந்து உள்ளனர்.

இப்பகுதிகளில் உள்ள கிராம சேவை அலுவலர்கள் மூலம் இவர்கள் பற்றிய கணக்கெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்துள்ள இம்மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகம் (சண்டிலிப்பாய்) ஊடாக வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகளை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் மேற்கொண்டுவருகிறார். (ஐ-152)

# பாடசாலை மாணவர்களுக்கு 'யுனிசெவ்' உதவிப் பொருள்கள்

வலி வடக்கு, டிசெ.25

'யுனிசெவ்' நிறுவனத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்ட கல்வி வலயங்கள் ஊடாக இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் சிறுவர்களுக்கே இப்பொருள்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

தரம் 5 இன் கீழ் உள்ள வகுப்புகளில் 10 பேரும் தரம் 5 இன் மேல் உள்ள வகுப்புக்களில் 10 பேரும் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்க இப்பொருள்கள் வழங்கப்படுகின்றன.

(ஐ-86)

## சாயி சமித்தியில் நத்தார் விழா

யாழ்ப்பாணம்,டிசெ.25

திருநெல்வேலியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் நத்தார்விழா நடைபெறும்.

அருட்தந்தை நிக்கலஸ் அடிகளாரின் சிறப்புச் சொற்பொழிவு உட்பட பல நிகழ்சிகள் அங்கு இடம்பெறும்.

## மாதாந்த உதவிப்பணம் பெற ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.25

தனக்களப்பு உபதபால் அலுவலகத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் சாவகச்சேரி தபாலகத்தில் அதனைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக தனங்களப்பு கிராம அலுவலர் க.பாலசிங்கம் அறிவித்துள்ளார்.

தனங்க்ளப்பு, மறவன்புலோ பகுதி மக்கள் இடம்பெயர்ந்து பல இடங்களிலும் தங்கி இருப்பதால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

(ஐ)


## வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் அரச திணைக்களங்களில் பதிவு செய்யபட்டுள்ள ஒப்பந்தகாரார்களிடமிருந்து கோரப்படுகின்றன. கேள்விகள் எதிர்வரும் 30-12-99 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் அன்றைய தினமே பிற்பகல் 2.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதியை **"தவிசாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி" என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை, "பிராந்திய உள்ரூராட்சி உதவ ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்." என்ற முகவரிக்கும் எதிர்வரும் 30-12-99 ஆம் திகத நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ, பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்ககூடியதாக அனுப்பிவைக்கவேண்டும்.**

| வேலையின் பெயர் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப்பத்திரப் பணம |
|---|---|---|
| 01. சிறுவர் பூங்கா அமைத்தல், இருபாலை | 2000.00 | 500.00 |
| 02. முழுமதி சனசமூகநிலையத் திருத்தம், கோப்பாய் | 500.00 | 150.00 |
| 03. சரஸ்வதி சனசமூகநிலைய பாலர் பாடசாலை தொடர்வேலை, கோப்பாய் | 500.00 | 150.00 |
| 04. அண்ணா சனசமூகநிலையத் திருத்தம், யோகபுரம் | 500.00 | 150.00 |
| 05. பொது விளையாட்டு மைதானம் அமைத்தல் அச்சுவேலி | 1,500.00 | 300.00 |
| 06. கலைக்கதிர் சனசமூகநிலையத்திருத்தம், வளலாய | 1,000.00 | 250.00 |
| 07. கதிரொளி சனசமூக நிலையத்திருத்தம், அச்சுவேலி | 500.00 | 150.00 |
| 08. புனித திரேசா பாலர் பாடசாலை திருத்தம், அச்சுவேலி | 500.00 | 150.00 |
| 09. முரசொலி சனசமூகநிலையத் திருத்தம், அச்சுவேலி | 500.00 | 150.00 |
| 10. ஞானவைரவர் சனசமூகநிலையத் திருத்தம், அச்சுவேலி | 500.00 | 150.00 |
| 11. எல்லாளன் சனசமூக நிலையத் திருத்தம், அன்னவெளி புத்தூர் | 500.00 | 150.00 |
| 12. ஜனசக்தி சனசமூகநிலையத் திருத்தம், புத்தூர் | 500.00 | 150.00 |
| 13. கலையகம் பாலர் பாடசாலை திருத்தம், புத்தூர் | 500.00 | 150.00 |
| 14. வளர்மதி சனசமூக நிலையம் அமைத்தல் | 1,500.00 | 300.00 |
| 15. சிவசக்தி சனசமூக நிலையம், நீர்வேலி | 1,000.00 | 250.00 |
| 16. அச்சுவேலி சந்தை மேல்மாடி மேலதிக வேலை | 3,000.00 | 750.00 |
| 17. உரும்பிராய் சந்தைக்கு சுற்றுமதில் கட்டுதல் | 1,000.00 | 250.00 |
| 18. உரும்பிராய் உப அலுவலகத்திற்கு சுற்றுமதில் கட்டுதல் | 1,000.00 | 250.00 |

மேறகுறிப்பிட்ட வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக்கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 29-12-99 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக்கட்டணங்கள் மீளளிக்கப் படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**பூ. குணசிங்கம்,**
**ஜே.பி.யு.எம் தவிசாளர்,**
**வலி. கிழக்கு பிரதேச சபை,**
**நீர்வேலி.**

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
23-12-1999

(C/10311)

# பிள்ளைகள் இல்லம்

**சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.**

**இல்லத்தில் பெண்பிள்ளைகள் அனுமதிக்கப்படுவர். வயது 7-10 வரை. பெற்றோர் இல்லாதவர்கள் வியாதிகள் உள்ள பெற்றோரின் பிள்ளைகள் 31-12-99 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.**

## தேவை

மேற்றன் (Matron).
தாதிமார் - வெளிநோயாளர் பிரிவு.
பல் வைத்தியர்.
பயிற்சி பெற்ற பாலர் பாடசாலை ஆசிரியை.
(Montessori School)

(72004)

நிர்வாகம்,
**ஹியுமெடிக்கா ஸ்தாபனம்.**


## முதலாவது ஆண்டு நினைவில்

தோற்றம் 05 - 08 - 1927



மறைவு 25 - 12 - 1998

# வேணுகோபால் கனகவல்லி

அன்பின் திருவுருவே, பாசத்தின் பிறப்பிடமே
பெருமைக்கு உரிய எம் அம்மாவே!
ஓராண்டு மறைந்தாலும் நீராண்ட எம் நெஞ்சத்து
நினைவுகள் அகன்றிடுமோ?
உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

110, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(72009)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யதார்த்தங்களை எடுத்துரைக்க பிறக்கின்றார் பாலன்

ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு விதத்திலும் வரலாற்றின் பக்கங்களுக்குள் கட்டுப்பட்டுவிடுகின்றான். இது யதார்த்தம். அந்த வகையில் வரலாற்றின் புதியதொரு அத்தியாயத்தை திறப்பதற்கு - இன்னுமொரு மிலேனியத்தை எதிர்கொள்வதற்கு - முழு உலகமுமே தன்னைத் தயார்ப்படுத்துகின்றது.

**திராட்சையூர் றஜன்**

ஆனால்போரின் எச்சங்கள் மலிந்துபோன எமது தேசத்தில்... கருச்சிதைவுகளாகிப்போன எம் மக்களின் காத்திருப்புக்கள் வரிசையில்புதிய ஆயிரமாம் ஆண்டில் மீண்டும் ஒரு விடியலின் காத்திருப்பு.

எமது மண்ணில் போரம்மா பிரசவித்துச் சென்ற குறைமாதக் குழந்தைகள் பல. அவற்றுள் இனங்காணப்பட்டவை சிலவே. காணாமல்போனோர் பட்டியல்களிலும், கண்டுபிடிக்க இயலாதோர் பட்டியல்களிலும் நாளாந்தம் பதிய அத்தியாயங்கள் திறக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இதனால் அதிகரித்துவரும் விதவைகளும், அநாதைகளும், ஆதரவற்றோரும், அவர்களது யாகங்களும் முடிவிலிகளாகப் பெருகும் நிலைதான் இன்றைய மிச்சங்கள்.

எமது அப்பாவிகளான அப்பாக்களின் அம்மாக்களின் இரத்தம்பட்டுச் சிவந்துபோன பூமி. பெற்றவர்களின் நிரந்தரப் பிரிவினால் அநாதைகள் என்று முத்திரை குத்தப்பட்டு; அநாதை இல்லங்களை அலங்கரித்து வரும் சிறார்கள் ஏராளம். சூன்யமாகிப்போன எதிர்காலமும், உறவுகளின் தொலைவுகளும், பழிவாங்கும் ஓர்மத்தை பிஞ்சு உள்ளங்களில் விதைத்துச் சென்றுள்ளன.

இடப்பெயர்வின் வடுக்கள் ஆறமுன்பு மீண்டும் இடப்பெயர்வுகள். வாழ்வின் சுமைகளோடு போராடிக் களைத்துப்போன மக்களுக்கு உயிரின் சுமையோடு மீண்டும் ஒரு போராட்டம்; இவ்வாறாக வாழ்வின் துன்பியல்ப் பக்கங்களைப் பார்த்து வெறுத்துப்போன எமது மக்களுக்குப் புதிய மிலேனியத்தில் கிறிஸ்துவின் பிறப்புச் செய்தி எதைச் சுமந்துவருகின்றது என்ற அங்கலாய்ப்பு இல்லாமல் இல்லை.

( 8ஆம் பக்கம் பார்க்க)

'ஹெந்தல' கப்பலில்
வெங்காயம்
ஏற்றுவோர் கவனத்துக்கு

தற்சமயம் சிமெந்து இறக்கிக் கொண்டிருக்கும் 'ஹெந்தல' கப்பலில் புகையிலை, வெங்காயம் போன்ற பொருள்களை திருகோணமலைக்கு ஏற்றி அனுப்ப விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்:

ஜெசிபா ஏஜென்ஸி,
132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

T. Phone :- 2407 Fax :- 2140

(C/10291)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### இறைச்சிக்கோழி

Broilerசேவல பேட்டுக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (71806)

இறைச்சிக்கோழி (Broiler) கல் பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம்செய்து வேண்டிய நிறைக ளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல. 15, 6ஆம் குறுக்குவீதி, யாழ்ப் பாணம்.(சின்னக்கடை அருகில்)(71963)

இறைச்சிக்கோழி (Broilers) கல் பேட்ஸ் என்பன விற்பனைக்குண்டு சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:- 40, கோயில்வீதி, யாழ்ப் பாணம். (71974)

### புறொயிலர் விற்பனை

சகல நிறையிலும் புறொயிலர் விற்பனைக்குண்டு. நத்தார் தினத்தை முன்னிட்டு முன்கூட்டிய ஓடர்கள் பெற் றுக்கொள்ளப்படும். 54/2, சந்தனமாதா கோவில் முன் ஒழுங்கை, கொழும்புத் துறைவீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப் பாணம். அல்லது 217/A, ஆஸ்பத் திரிவீதி, (முலவைச்சந்தி) யாழ்ப் பாணம். (71973)

### திருமண சேவை

எம்மிடம் அரச உயர் பதவியில் பணிபுரியும் மணமகன்களும் மணப் பெண்களுமுண்டு. வெளிநாட்டு மண மக்களுமுண்டு. விருப்பமுள்ளவர்கள் ஜாத கத்துடன் நேரிலோ/கடித மூலமோ விநாயகர் திருமண சேவையின் பணிப் பாளருடன் தொடர்புகொள்ள முகவரி:- சுவாமியார் இராசகுலசிங்கம், 63, கஸ் தூரியார் வீதி, நிராவியடி, யாழ்ப் பாணம். (71955)

### யாழ்ப்பாணம்

அழுமையல்ல நாடகம் கேட்டீர் களா? அதை எழுதிய அராலியூர். ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1.யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல் 2. நாடகம் எழுதுவது எப்படி? என்பதை விளக்கும் ஒரே ஒருநூல் ரூபா 50/= (71916)

### விற்றுத் தீர்த்தல்

நல்ல பாலின ஜமுனாபாரி ஆடு கள், குட்டிகள் சினைப்படுத்துவதற் குரிய 2 ஜமுனாபாரி கடாக்கள், டாஷோன் ஆண் நாய் (1வருடம்) மற்றும் இறைச்சிக்குரிய வான்கோழி கள், முட்டை இட்டுக் கொண்டிருக்கும் வான்கோழிகள், வெள்ளை, கறுப்பு கினிக்கோழிகள், அடைக்குரிய முட் டைகள் என்பன, விற்பனைக்குண்டு. தொடர்பு:S.P.தாசன் 75, செட்டிதெரு, நல்லூர். (71977)

## நீங்காத நினைவதிலே அகன்றது ஆண்டொன்று

தோற்றம்
28
-
12
-
1958



மறைவு
25
-
12
-
1998

அமரர் **யோசை யேசுராஜா**

(ராசா)


ஓராண்டு சென்றதையா
நீ மறைந்து - எமைவிட்டு
ஓடோடி வந்தாயோ - நீ
ஓடோடிச் சென்றாயோ
உன் நினைவு கனவா? அல்ல நனவா!
உன் ஆத்மா சாந்தி பெற
நாம் இறையை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி - அஞ்சலா (ஆசிரியை)
மகள் - யூடி அபின்ஷா

கரம்பொன்,
ஊர்காவற்றுறை. (71968)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
21
-
02
-
1928



உதிர்வு
27
-
12
-
1989

**பஸ்ரியாம்பிள்ளை பிலிப்புபிள்ளை**

(பொன்னுத்துரை)

''வாழ்வில் என்னை நேசித்தவர்களே
மரணத்தில் என்னை மறவாதீர்கள்''

இவரது பிரிவால் துயருறும்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றா
உறவினர்.

'கனகராஜா வில்லா'
தபாற்கந்தோரடி,
நெல்லியடி,
கரவெட்டி. (71996)

உடுவில் அரவிந்தன் எழுதிய......

# உணர்வுகள்

(சிறுகதைத் தொகுதி)

## வெளியீட்டு விழா

**இடம்:** யா/இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபம், மருதனார்மடம்.

**காலம்:** 26.12.1999 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி

**தலைவர்:** 'செஞ்சொற்செல்வர்' ஆறு.திருமுருகன்

### நிகழ்வு நிரல்

* இறைவணக்கம்
* தமிழன்னைக்கு...
* வரவேற்புரை: **திரு.சி.சிவராஜன்.**
(ஆசிரியர், மெமோறியல் ஆங்கில பாடசாலை)
* வாழ்த்துரைகள்: டாக்டர் (திருமதி) ஞானஅமிர்தம் பவானி
( தலைவர்,
யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை)
**திருமதி. மங்கையர்க்கரசி - திருச்சிற்றம்பலம்**
(பேரவை உறுப்பினர்,
யாழ். பல்கலைக்கழகம்)
**திருமதி.ஆனந்தி சிவஞானசுந்தரம்**
(அதிபர், யா/இராமநாதன் கல்லூரி)
**திரு.தி.தியாகச்சந்திரன**
( தலைவர்,
உடுவில் இந்து இளைஞர் மன்றம்)
* வெளியீட்டுரை: **'செங்கை ஆழியான்'**
**கலாநிதி க.குணராசா**
* முதற்பிரதி பெறுபவர்: **திரு.க.சிவாஜ**
(அதிபர்,யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
* சிறப்புப்பிரதி பெறுபவர்கள்:
**திரு.செல்லையா சிவஞானம்**
**திருமதி.சரோஜினிதேவி கல்யாணசுந்தரேசன்**
(ஓய்வுபெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர்)
**திரு.நா.கணேசபிள்ளை**
(ஓய்வுபெற்ற உபஅதிபர்)
**திருமதி சரஸ்வதி கனகேஸ்வரன்**
(ஓய்வுபெற்ற ஆசிரியை.)
**திருமதி சிவமணி புஸ்பராசா**(இணுவில்)
**திரு. த.இராமேஸ்வரன்** (உடுவில்)
**திரு.இ.சீலன்** (நியூ.ரட்ணம் ஸ்ரோர்ஸ், உடுவில்)
**திரு.த.குமாரராஜா**
(ஷண் நகைத்தொழிலகம் உரும்பராய)
* மதிப்புரைகள்: சிற்பி. சரவணபவன்
செம்பியன் செல்வன்
* ஏற்புரை: நூலாசிரியர்
* நன்றியுரை: செல்வி அஜந்தா அப்புத்துரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(71984) - **விழா ஒழுங்கமைப்பாளர்**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



வேலணை தெற்கு அமரர்

**டாக்டர் கந்தையா சதமணி**

அம்மா நீ மறைந்து மூன்றாண்டு கழிந்திட்டாலும்
எம்மா நாம் உம் நினைவால் என்றுமே வாழ்ந்திடுவோம.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரர், போர்த்திமார்.

நடன முருகன் -
வைத்திய நிலையம்
வேலணை. (71966)

### பரீட்சகர்கள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.25

ஜி.சீ.சு (சாதாரணதரப்) பரீட்சை யின் பிரதம பரீட்சகர்களுக்கான அறி வுறுத்தல் கூட்டம் எதிர்வரும் 28ஆம் 29ஆம் திகதிகளில் கொழும்பில் நடை பெறவுள்ளது.

மேற்படி பரீட்சகர்கள் 27ஆம் திகதி பிரயாணம் செய்வதற்குரிய ஒழுங்குகளுடன் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரிக்கு காலை 8.30 மணிக்கு வருகை தருமாறு தெரிவிக்கப்பட்டுள் ளது.

இவர்களுக்கான பிரயாண ஒழுங் குகள் யாவும் ஏற்கனவே மேற்கொள் ளப்பட்டுள்ளதாக யாழ். கல்விவலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-10)

### நாடகப்போட்டி

யாழ்ப்பாணம்,டிசெ.25

ஆரம்பக் கல்விக்கான சீர்திருத் தத்தைக் குறிக்கோளாகக்கொண்டு பாடசாலை ரீதியான நாடகப் போட டிகள் கோட்ட, வலய மட்டத்தில் நடை பெறவுள்ளன.

யாழ். வலயத்தில் இப்போட்டிகள் ஜனவரி 5ஆம் திகதி கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கும் - ஜனவரி 6ஆம் திகதி நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கும் - ஜனவரி 7ஆம் திகதி யாழ். கல் விக் கோட்டப் பாடசாலைகளுக்கும் - நடைபெறவுள்ளன.

வலய மட்டத்திலான போட்டிகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்று கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வலய மட்டத்தில் தெரிவு செய்யப்படுவோர் மாகாண மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்ற முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

### தீவுப்பகுதியிலிருந்து மீன் வருகிறது

அரியாலை,டிசெ.25

யாழ்நகரில் மீனுக்குத் தட்டுப்பாடு நிலவுவதை அடுத்து வியாபாரிகள் தீவுப்பகுதியில் இருந்து மீன்னை கூடு தலாக எடுத்துவருகின்றனர்.

மோட்டார் சைக்கிள் மற்றும் வாக னங்களில் மீன் தீவுப்பகுதியிலிருந்து யாழ் கொட்டடி மீன் சந்தைக்கு தின மும் எடுத்துவரப்படுகின்றது. (ஐ-17)

### இளைஞன் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25

கடந்த 14ஆம் திகதி படையின ரால் கைதுசெய்யப்பட்ட இளைஞர் ஒருவர் விசாரனைகளின் பின்னர் விடு விக்கப்பட்டுள்ளதாக அவரின் உறவி னர்களால் மனிதஉரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது.

வேலணை கிழக்கு துறையூரைச் சேர்ந்த சிவகடாட்சம் லிங்கரூபன் (வயது18) என்பவரே விடுதலை செய் யப்பட்டவராவார். (ஐ-10)

### யதார்த்தங்களை....

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'பெரும் சமை சுமந்து சோர்ந்திருப் பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங் கள்; நான் உங்களுக்கு இளைப்பாறு தல் தருவேன்' என்று அழைக்கும் ஆண்டவர் நம்பிக்கை தரும் வார்த்தை களை எமக்குத் தருகின்றார்.

"அவர்களுடைய கண்ணீர் அனைத் தையும் அவர் துடைத்துவிடுவார். இனி மேல் சாவு இராது, துயரம் இராது, அடிமை இராது, துன்பம்இராது, முன்பு இருந்தவை மறைந்து போயின"

(திருவெளி 21:4)

ஆனால் இத்தனை மனித அவலங் கள் மத்தியிலும் தங்கள் சுய அடை யாளங்களைத் தொலைத்து, யதார்த் தத்தை மறைக்க முயலும், பண முத லைகளும் இல்லாமல் இல்லை. ஆடம் பரப் பொருள்களின் தாராள இறக்கு மதிகளும், நுகர்வுகளும், தொலைவி லிருந்து எமக்கு வரும் 'ஹலோக் களும்' சினிமா நாகரிகத்தின் படை யெடுப்பும் இங்குள்ள யதார்த்தங்களை ஒருபோதும் மறைக்க இயலாது. இங்கு மறைந்து, மௌனித்து, மரணித்துப் போகும் யதார்த்தங்களை எடுத் துரைக்க பிறக்கின்றார் பாலன்.

பல்வேறு கோணங்களில் நசுக்கப் பட்டும், ஒடுக்கப்பட்டும், சுரண்டப்பட்டும், உரிமைகள் பறிக்கப்பட்டும், விரக்தி யுற்றும்போன எமக்கு கிறிஸ்மஸ் விடு தலையின் செய்தியைத் தாங்கி வரு கின்றது.

*"ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலைஅடைவர்,பார்வையற்றோர் பார்வைபெறுவர்என முழக்கமிடவும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும்..."*

இந்த ஆறுதல் தரும் விடுதலை வார்த்தைகள் எமது வாழ்வின் நம்பிக் கைக் கீற்றுக்களைச் சுட்டி புதிய மிலே னியத்தை விடுதலையின் மிலேனிய மாக வரவேற்க அழைக்கின்றது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிரடி அரங்கு

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை தென்னிலங்கையுடன் ஒப்பிடும்போது யாழ். குடாநாட்டில் வாக்களிப்பு அமைதியாகவும் சுமுகமாகவும் இடம்பெற்றது என்றுதான் கூறவேண்டும். மக்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை என்பது வேறு விடயம்.

ஆனால் இந்த வாக்களிப்பை ஒட்டி இடம் பெற்ற குளறுபடிகள் சுவையானவை.

பணம் மற்றும் தண்ணீர் வார்த்து வாக்களர்களை வளைத்துப் போடுவதிலும் வாக்காளர் அட்டைகளைச் சுருட்டிக் கொள்வதிலும் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் மும்முரமாக ஈடுபட்டிருந்ததை ஆங்காங்கே காணக்கூடியதாக இருந்தது. சுருட்டிய வாக்காளர் அட்டைகளை ஒழுங்கு படுத்தி, அதனடிப்படையில் 'கள்ள வோட்டு' போடுவதற்காக ஆட்களைத் திரட்டி, ஆங்காங்கே உள்ள வாக்களிப்பு நிலையங்களுக்கு மினிபஸ்களில் ஏற்றி இறக்குவதிலும் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டனர்.

ஒரு வேட்பாளரைத் தவிர ஏனையோருக்கு வாக்களிப்பு நிலையங்களில் முகவர்கள் இல்லாததும் கள்ள வாக்குப் போடுவதற்கு மிகச் சுலபமான சூழ்நிலையைத் தோற்றுவித்துவிட்டது.

இலங்கை முழுவதும் பொதுவான தேர்தல்களில் இத்தகைய குளறுபடிகள் தவிர்க்க முடியாதவை - வழமையானவை - என்றாலும், குடாநாட்டில் வாக்களித்தோர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது கள்ளவாக்குகளின் தாக்கம் குறிப்பிடப்படவேண்டிய ஒன்று என்பதையும் மறுப்பதற்கில்லை.

இங்கு அளிக்கப்பட்ட வாக்குகளோ, கள்ள வாக்குகளோ தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் தேர்தல் முடிவுகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. ஆனால் போட்டியிடாத உள்ளூரார் சிலருக்கு அது வாய்ப்பாக மாறிவிட்டதாகத் தெரிகின்றது. இந்த வாக்களிப்பை வைத்துக் கொண்டு அமைச்சர் பதவிக்குக் கூட பேரம் பேசப்படுவதாக ஒரு தகவல்.

யாழ்.மாவட்ட வாக்களிப்பில் இன்னும் சுவையான விவகாரம் என்னவென்றால் முக்கிய வேட்பாளர்களைத் தவிர, ஊர், பெயர் தெரியாத பல வேட்பாளர்களுக்கும் - வேறு எந்த இடத்திலும் இல்லாத மாதிரி - பரவலாக வாக்கு விழுந்திருப்பதுதான். வாக்களிக்கச் சென்றோருக்கு 'தண்ணீர்' வார்த்ததின் விளைவே இது என்று நம்பப்படுகின்றது.

சந்திரிகா குமாரத்துங்க, ரணில் விக்கிரமசிங்க, வாசுதேவ நாணயக்கார போன்றோருக்கு இங்கு வாக்குகள் விழுந்ததை புரிந்து கொள்ளமுடிகின்றது. குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்த 1,711 முஸ்லிம்கள் புத்தளத்திலிருந்தபடியே யாழ். மாவட்டத்துக்கான தேர்தலில் வாக்களித்திருப்பதை வைத்துக்கொண்டு ஸ்ரீலங்கா முஸ்லிம் கட்சி வேட்பாளர் அப்துல் ரசூலுக்கு ஆயிரத்து 41 வாக்குகள் குடாநாட்டில் கிடைத்ததையும் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் அல்விஸ் வீரக்கொடி பிரேமரத்ன (சுயேச்சை) 403, ஆரியவன்ஸ திஸநாயக்கா (ஜனநாயக ஐக்கிய முன்னணி) - 340, நந்தன குணதிலகா (ஜே.வி.பி.) - 413, கமல் கருணதாசா (மக்கள் விடுதலை தோழமை முன்னணி) - 487, டென்ஸன் எதிரிசூரிய (சுயேச்சை) - 831, டிபிள்யூ.பி.எம்.ரஞ்சித் (சுயேச்சை) - 1,873, ரஜீவ விஜயசிங்க (லிபரல் கட்சி) - 1,378, ஹட்சன் சமரசிங்க (சுயேச்சை) - 582, ஹரிசந்திர விஜேதுங்க (பூமிபுத்திர கட்சி) - 818 வாக்குகளை யாழ். மாவட்டத்தில் பெற்றிருக்கின்றனர்.

இப்படி தமது சொந்த ஊரிலேயே கிடைக்காத அளவு வாக்குகள் சில வேட்பாளர்களுக்கு யாழ்ப்பாணத்தில் விழுந்திருப்பதற்கு 'தண்ணி மகாத்மியம்'தான் காரணம் என்று கூறப்படுகின்றது.

அத்தோடு குடாநாட்டில் அளிக்கப்பட்ட சுமார் 1லட்சத்து 17 ஆயிரம் வாக்குகளில் சுமார் ஆறாயிரம் வாக்குகள் செல்லுபடியற்றவையாகி இருப்பதை ஓரளவு ஏற்க முடிகின்றது. கணிசமான யாழ். வாக்காளர்கள் தமது அதிருப்தியைக் காட்டுவதற்காக இப்படி நடந்து கொண்டிருக்கக் கூடும். அல்லது வாக்களிக்கும் முறை தெரியாததால் அவ்வாறு நிகழ்திருக்கக் கூடும்.

தேர்தல் வாக்களிப்பு ஒருபுறம் இருக்க, தேர்தலில் கடமையில் பங்குபற்றிய ஊழியர்கள் பட்ட அவஸ்தை பெரிய கதை.

வாக்களிப்பு முடிந்து யாழ். நகருக்குத் திரும்பிய அதிகாரிகள், ஊழியர்கள் வீடுகளுக்குத் செல்வதற்கு பஸ் வசதியின்றி அல்லற்பட்டனர்.

அதைவிட, வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்ட அரச ஊழியர்களுக்கு அன்று இரவு யாழ். செயலகத்தில் வைத்து வழங்கப்பட்ட உணவு எல்லோரையும் 'நாறடிக்க' வைத்து விட்டது என்பதுதான் சோகம்.

அந்த உணவை உண்ட பலர் வாந்தி எடுத்தனர். அவர்களில் ஐவர் அன்றிரவே யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இரவு உணவுக்கு என கொண்டுவரப்பட்டவற்றில் ஐந்நூறு பார்சல்கள் அதன் தரம் காரணமாகச் சீண்டுவாரின்றிக் கிடந்து அடுத்த நாள் செயலக வளவில் வெட்டிப் புதைக்கப்பட்டதாகவும் தெரிகின்றது.

* * *

தேர்தல் காலத்தில் அரசியல்வாதிகளும் கட்சிகளும் தமக்கு வாக்குத் திரட்டுவதற்காக வேலை வாய்ப்புக்களை அள்ளி வீசுவது கடந்த ஐம்பது ஆண்டு கால இலங்கை வரலாற்றில் புதுமையானதொன்றல்ல.

ஆகவே இபபோதும் தேர்தலை ஒட்டி அள்ளித் தெளிக்கப்படும் அரச நியமனங்களை யாரும் குறை சொல்லப்போவதில்லை. கிடைத்தளவுக்கு மகிழ்ச்சி என்று வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதுதான் சிறந்தது - அது எந்த வழியில் வந்ததாக இருந்தாலும். வாக்களிப்புத் தினத்தன்று காலையில் கூட வேலை வாய்ப்புப் பட்டியலைப் பிரசுரித்து வாக்குத் தேடும் உத்தி தெரிந்தவர்கள் நாம்.

தேர்தல் அறிவிப்பு வந்த பின்னர் இப்படி வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு அடிக்கும் திட்டங்களை அரசுகளும், கட்சிகளும் அறிவிக்கக் கூடாது என்று இந்தியத் தேர்தல் சட்டத்தில் கூறப்பட்ட ஏற்பாடுகள் இங்கு இல்லை என்பதால் இத்தகைய போக்குகளை விமர்சிப்பதோடு நாம் நிறுத்திக்கொள்ள வேண்டியதுதான்.

ஆனால் இந்தக் குறுக்கு வழித்தனம் இப்போது எல்லை மீறிவிட்டது.

இப்போது தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனம் - அரசு வழங்கும் நியமனம் - கல்வி அலுவலகங்களில் அதிகாரிகளால் வழங்கப்படாமல் கட்சி அலுவலகத்தில் வைத்து கட்சிப் பிரமுகர்களால் வழங்கப்படும் கேவல நிலைக்கு நமது கல்வி நிர்வாகம் தரம் தாழ்ந்து போய்விட்டது.

கல்வி அதிகாரிகள் கைகட்டி, வாய் புதைத்து பணி புரியும் அசிங்கத்தை - அலங்கோலத்தை - பார்த்தால் வயிற்றைப் புரட்டுகின்றது!

தொண்டர் ஆசிரியர் நியமனங்களை வடக்கு - கிழக்கு மாகாணசபை வழங்குகின்றது. இதில் ஈ.பி.டி.பியின் யாழ். அலுவலகப் பொறுப்பாளருக்கு என்ன சம்பந்தம்? ஏன் அவரின் அலவலகத்துக்குப் போய் கியூவில் நின்று அவர்கள் நியமனக் கடிதத்தைப் பெறவேண்டும்? அரச நியமனங்களை வழங்கும் அதிகாரம், கட்சி அலுவலகத்துக்கு வழங்கப்பட்டு விட்டதா? நியமனக் கடிதங்களை கட்சி அலவலகத்துக்கு அனுப்பிய அதிகாரி யார்? நியமனக் கடிதத்தில் ஒப்பமிட்ட திருவாளர் திருகுதாளத்துக்கு நிர்வாகம் என்றால் என்னவென்பது தெரியாதா? உரிய முறையில் - உரிய இடத்தில் இது குறித்து கேள்வி எழுப்பப்படும் போது, என்ன குத்துக்கரணத்தை அடித்து அவர் சமாளிக்கப் போகிறார்?

ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் விசாரணைக்கு எடுக்கப்பட வேண்டிய விடயமாக இது விரைவில் மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கல்வி அதிகாரிகள் - மாகாண மட்டத்திலோ, மாவட்ட மட்டத்திலோ, வலய மட்டத்திலோ - எந்த மட்டத்தில் இருந்தாலும் - இத்தகைய துஷ்பிரயோகங்களுக்கு துணை போவதால் இப்போதைக்கு தம்மை ஸ்திரப்படுத்தித் தம் குறைபாடுகளை மறைத்து விடலாம். ஆனால் பதில் சொல்ல வேண்டிய காலத்தில் பதிலளிக்க வேண்டியிருக்கும் என்பதை மறந்து விடக்கூடாது.

**மின்னல்.**

# பிரெஞ்சு மருத்துவரின் சேவையை மந்திகையில் மீண்டும் பெற முயற்சி

நெல்லியடி,டிசெ.25

பிரெஞ்சு மருத்துவக்குழுவின் சேவையை மீண்டும் பெற்றுக்கொள்ள பருத் தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் முயற்சி மேற்கொண்டுள்ளார்.

பிரெஞ்சு மருத்துவக் குழுவின் யாழ். இணைப்பதிகாரி கிறிஸ்ரின் பயோட் தலைமையிலான குழுவினர், நேற்று முன்தினம் காலை மந்திகை மருத்துவமனைக்கு விஜயம் செய்து இங்கு நிலவும் டாக்டர் பற்றாக்குறை, நோயளர்களின் நிலை சம்பந்தமாக, மாவட்ட வைத்தியஅதிகாரியிடம் கேட்டறிந்தனர்.

இங்கு ஏற்கனவே பணிபுரிந்து வந்த தென் இலங்கை டாக்டர்கள் அண்மையில் கொழும்புக்கு திரும்பியதையடுத்து, தற்பொழுது மந்திகை மருத்துவமனையில் டாக்டர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதனால், கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட பல சத்திரசிகிச்சைக்குரிய நோயாளிகள் பெரும் சிரமம் அடைவதுடன் உயிராபத்தையும் எதிர்நோக்கி வருவதாகவும், மாவட்ட வைத்திய அதிகாரி இக் குழுவினரிடம் எடுத்துக் கூறினார்.

இதனையடுத்து, இங்குள்ள சத்திர சிகிச்சைக் கூடம், இரத்த வங்கி போன்ற பிரிவுகளைப் பார்வையிட்ட மருத்துவக் குழுவினர் மீண்டும் மந்திகையில் தமது சேவையை ஆரம்பிக்கலாமா என்பது குறித்து தமது தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

பெரும்பாலும் இவர்களின் வைத்திய சேவை அடுத்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரெஞ்சு மருத்துவக் குழுவினர் கடந்த 12வருடகாலம், மந்திகை மருத்துவமனையில் பணிபுரிந்து கடந்த 1997 ஆம்ஆண்டு நடுப்பகுதியல் தமது சேவை இடைநிறுத்தினர். (ஐ-109)

## நாவலர் விழா

வலிகாமம்தெற்கு,டிசெ.24

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் நாளை ஞாயிற்றுக்கிழமை உடுவிலில் நாவலர் விழா கொண்டாடப்பட உள்ளது.

உடுவில் மான்ஸ் வித்தியாலயத்தில் பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாக உள்ள இவ்விழாவுக்கு மன்றத்தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமை வகிப்பார்.

இவ்விழாவில் யாழ்.பல்கலைக் கழக உயர் பட்டப்பீடத்தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுவார்.

முன்னாள் மாவட்ட நீதியரசர் மு.திருநாவுக்கரசு கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு, 'நாவலர் இல்லாத நாடு' என்ற பொருளில் நினைவுரையாற்றுவார்.

உடுவில் இந்து இளைஞர் மன்ற ஆண்டுவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் மன்ற மட்டத்தில் பரிசு பெறும் பாலர் பாடசாலை சிறுவர்களுக்கான பரிசில்களும் இவ் விழாவில் வைத்து வழங்கப்படும். (ஐ-152)

## சட்டவிரோதமாக ஏற்றிவந்த மரம் பறிமுதல்

வலி வடக்கு,டிசெ.24

சட்டவிரோதமாக அனுமதியின்றி ஏற்றிவந்த மரங்களை மல்லாகம் பகுதியில் படையினர் தடுத்து வைத்தனர்.

ஊடரடங்கு அமுலுக்கு வரும் நேரத்துக்குச் சற்று முன்பாக மரங்களை உழவு இயந்திரத்தில் ஏற்றி வந்தவேளை மல்லாகம் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற படையினர் மரங்களை தடுத்து வைத்ததுடன் மரங்களை விற்பனை செய்தவரை அழைத்து வருமாறு அவற்றை ஏற்றி வந்தவர்களுக்குப் பணித்தனர். (ஐ-56)

## கூட்டம்

சங்கானை,டிசெ.24

சங்கானை தெற்கு மாவடி சன சமூக நிலையத்தின் இரண்டாயிரம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மேற்படி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க)

## கிறிஸ்மஸ் நிகழ்வு

ஊரெழு ஸ்ரீ சத்யசாயி மண்டலியின் கிறிஸ்மஸ் தின நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மண்டலியில் நடைபெறும். (ஐ)

# அடுத்த நூற்றாண்டில் இந்தியா வல்லரசாகும்!

## பிரான்ஸ் தெரிவிப்பு

வாஷிங்டன், டிசெ.25

அமெரிக்காவுக்கு சவாலாக இருக்கும் வகையில் இந்தியா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளும் ஐரோப்பாவும் உருவாகி இருக்கின்றன என்று பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

ஆண்டு இறுதியில் அளிக்கப்படும் பேட்டியின் போது பிரான்ஸ் அதிபர் ஜாக்கி சிராக்கும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் ஹயூபர்ட் பெட்ரினும் இதைக்குறிப்பிட்டனர்.

ஏவுகணை முறியடிப்பு ஆயத்த நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டால் இந்தியாவும் சீனாவும் அணுஆயுத வல்லரசுகளாக உருவாகும்.

'நியூயோர்க் டைம்ஸ்' இதழுக்கு சிராக் அளித்த பேட்டியின் போது 'அடுத்த நூற்றாண்டு அமெரிக்காவின் நூற்றாண்டாக இராது" என்றார். (ஐ)


எம்மை விட்டகன்று விண்ணைச் சென்றடைந்த

31ஆவது நாள்

நினைவஞ்சலி



மண்ணோடு கலந்தது 1947 - 08 - 25

விண்ணோடு இணைந்தது 1999 - 11 - 25

அமரர்

திருமதி புஸ்பராணி சிவராசா

காலையென்ன மாலையென்ன
எந்தெந்த வேளையிலும்
ஏழை நாங்கள் உங்களைத்தான்
எமது கண்ணீற் காணுகிறோம்
எங்கள் வீடு வெற்றிடந்தான்
எப்படி நாம் நிரப்பிடுவோம்
எங்கள் நெஞ்சு விதிவசத்தால்
ஏங்கி நிதம் தவிக்குதம்மா!

கணவன், பிள்ளைகள்.

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி.

(72028)



வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவர்க்கும் எமது நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் உரித்தாக வாழ்த்துபவர்

**பி.ஜெ.பர்னாண்டோ**

கண்பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்!
மிதுப்புப் பற்களுக்கான கிளிப் பொருத்துபவர்!
பல்கட்டுபவர்.

முக்கிய குறிப்பு:
வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாணவ மாணவியர் ஆதரவற்ற முதியோருக்கான சலுகை அடிப்படையிலான மூக்குக் கண்ணாடி வழங்குதல், பல்கட்டுதல், கிளிப் அமைத்தல் போன்ற பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்
லயன் A.ஜெயக்குமாரன்
பி.ஜெ.பர்னாண்டோ
542, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை: மோகன்ஸ்
பிரதான வீதி
நெல்லியடி.

(C/10324)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பிலிப்பு ஞானமுத்து

(புடைவை வியாபாரி)

பலாலி சேபஸ்ரியர் வீதியைப் பிறப்பிடமாகவும், 54/1 விதானையார் வீதி, சுண்டிக்குளியை தற்போதைய வசிப்பிடமாகவும் பலாலி சேபஸ்ரியர் ஆலயத்தைச் சேர்ந்தவருமான பிலிப்பு ஞானமுத்து 24-12-99 அன்று காலமானார்.

இவர் றீற்றம்மாவின் அன்புக் கணவரும், செல்வநாயகம் மரியகொறற்ரி, அன்ரன் அமலதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவசகாயம் செல்வநாயகத்தின் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்) பாசமிகு மாமனாரும், றொணால் யஸ்மின் (புனித பத்திரிசியார் பாடசாலை), ஆன்மேரி யஸ்மின், பீற்றர் யஸ்மின் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற அந்தோனி தேவசகாயம், மரியம்மா, செபமாலை ஞானப்பு ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல், இன்று (25-12-99) சனிக்கிழமை பி.ப. 2.00மணிக்கு புனித மரியம்மாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**செல்வநாயகம்**
(மருமகன்)

*54/1,விதானையார்வீதி,*
*சுண்டுக்குளி.* (72046)

## சீனியர் சிவலிங்கம்

(இலிகிதர், கொழும்பு)

மாவடி வல்வெட்டியைச் சேர்ந்த சீனியர் - சின்னம்மா தம்பதிகளின் புதல்வன் சிவலிங்கம் 21.12.99 செவ்வாய்க்கிழமை மாரடைப்பால் கொழும்பில் காலமானார்.

அன்னார் சரஸ்வதி, இரத்தினம், காலஞ்சென்ற முருகேசு (ரெக்ஸ்ரைல் இஞ்சினியர், பூகொடை நெசவாலை), தங்கம்மா, சிவபாக்கியம். பூமணி (ஆசிரியை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருநாவுக்கரசு, காலஞ்சென்ற கதிரவேலு, காலஞ்சென்ற கோபாலு, சாந்த குமாரி, தர்மலிங்கம்(லிங்கம்ஸ்ரோர்ஸ், அச்சுவேலி) பீதாம்பரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயகௌரி (பல்வைத்திய நிபுணர், மாவட்ட வைத்திய சாலை, வல்வெட்டித்துறை), இராகவன்(கனடா) கேசவன், ஸ்ரீகரேந்திரன் ஆகியோரின் சிறிய தந்தையும் பவளம், செல்வம்(கனடா) வேல்முருகு (இத்தாலி) இராஜசேகரம், பிரபாகரன்(கனடா), மனோன்மணி சிவஞானம் (பிரான்ஸ்) இராஜேஸ்வரி, ரஜனி(ஆசிரியை, கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலை) சோதிலிங்கம்(பிரான்ஸ்), மனோகரன்(பிரான்ஸ்), செங்கை ரமணன், சசிகலா, கோகிலா ஆகியோரின் அன்பு மாமனும் சுஜிதன், காயத்திரி, கீர்த்தனா, நிதுஷன், நிருஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.12.99) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எள்ளங்குளம் மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவ்ல்:
**தி.வேல்முருகு**
*(மருமகன்)*

*மாவடி,*
*வல்வெட்டி.* (72041)

## பொன்னையா கதிரேசு

திருநெல்வேலி கிழக்கு, புதிய செங்குந்தா வீதியைச் சேர்ந்த பொன்னையா கதிரேசு (கல்யாணத் தரகரும், பருத்தித்துறை முன்னாள் மருந்துக்கடை உரிமையாளரும்) 24.12.99 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா - தங்கம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்ற நல்லம்மா(ஆசிரியை) அவர்களின் அன்புக்கணவரும் கனகேஸ்வரி (ஜேர்மனி), யோகேஸ்வரி, யோகேஸ்வரன், காலஞ்சென்ற கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தர்மானந்தன், சிவயோகவதி, சசிகலா, காலஞ்சென்ற சுவாமிநாதன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.99) சனிக்கிழமை பிற்பகல் 1மணிக்கு திருநெல்வேலி இராமலிங்கம் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**த.யோகேஸ்வரி**
(மகள்)

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (72044)

## பெண்நோயாளர் வார்ட்டுகள் இடம்மாற்றம்

யாழ்.வைத்தியசாலையில் இது வரை காலமும் பெண் நோயாளர் விடுதியாக இயங்கிவந்த ஒன்று முதல் நான்கு வரையான வார்ட்டுகள் நேற்று முதல் புதிய கட்டடத்துக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-15-139-3)

## யோகர் நினைவாக

யோகர்சுவாமி நினைவாக ஆயிலிய நட்சத்திர தினமான நாளை நண்பகல் 12.00மணிக்கு நல்லூர் தேரடி மடத்தில் அன்னதானம் வழங்கப்படவிருக்கிறது.

நாளை பிற்பகல் 3.30மணியளவில் கொழும்புத்துறையில் உள்ள சுவாமிகளின் சமாதிக் கோயிலில் விசேட பூசைகள் இடம்பெறும். (உ-3-7)

## இயக்கச்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கிழக்கே சற்றுத் தொலைவில் சங்கத்தார்வயலில் அதிரடித் தாக்குதலை நடத்தி அவர்களுக்கு பேரிழப்பை ஏற்படுத்தியிருப்பதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

கண்டிவீதிக்கு நான்கு கிலோ மீற்றர் கிழக்கே கடுஞ்சண்டை நடைபெற்று வருவதை வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் முனசிங்க நேற்றிரவு ஒப்புக்கொண்டார்.(உ-3-7-8)

எமது இன்றைய
வீடியோ CD
வெளியீடு
* ஆசையில்
ஓர் கடிதம்
பிரதி விலை 350 ரூ.
ஆர்க் வீடியோ
லைபிறறி
அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
(C/10331)

வீடியோ CD
வெளியீடு
பிரசாந்த் நடித்த
* ஆசையில்
ஓர் கடிதம்
* சேது
நேரடி CDயில் இருந்து
பிரதிகளைப் பெற்றுக்
கொள்ளலாம்
விஷ்ணு வீடியோ
K.K.S. றோட்,
கோண்டாவில்.
(C/10332)

உங்கள் பிள்ளைகளுக்குத் தேவையான
பாடசாலை உபகரணங்களை
ஒரே இடத்தில் மலிவாகவும் மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள
அற்புதா டிரேடிங் கம்பனி
(யாழ். ஆஸ்பத்திரி வீதியில் பஸ்நிலையம் முன்பாக)
* பாடசாலை உபகரணங்கள் * காகிதாதிகள் * கொப்பிகள் * மைவகைகள்
அனைத்தும் மலிவு விலையில்
ATPUTHA TRADING COMPANY
198, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 2505, 2057
(சி-10828)

கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்கள்
றெனி மூக்குக் கண்ணாடி அகம்
RENNY OPTICIANS
கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்
இல. 288, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
540, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
பிரதேச செயலகம் அருகில்
இராமலிங்கம் வீதி,
சாவகச்சேரி.
வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எமது இதயங் கனிந்த
நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்
புத்தாயிரம் ஆண்டை புதுப்பொலிவுடன் வரவேற்கும்
றெனி மூக்குக் கண்ணாடி அகம்
(C/10325)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வராணி மாணிக்கசுந்தரம்

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் அன்புத் தெய்வம் திருமதி செல்வராணி மாணிக்கசுந்தரம் 24.12.1999 அன்று பகவான் பாதமடைந்தார்.

அன்னார் மாணிக்கசுந்தரம் அவர்களின் பாசமிகு அருமை மனைவியும், கிருபானந்தன்(லண்டன்), சுதானந்தன்(கனடா), ஜீவானந்தன்(பிரான்ஸ்), மாலினி(கொழும்பு), ஷியாமினி(லண்டன்), பிறேமினி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பான தாயாரும் சாந்தி(லண்டன்), தர்மினி(கனடா), ஜெயசோதி (பிரான்ஸ்), சந்திரகுமார்(செலான் வங்கி), எட்வேட்(லண்டன்), பாரத்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் நேசமிகு அருமை மாமியும், தணிகன், பிரணவன், பிரவீணன்(லண்டன்), சிந்துஜா, கார்த்திகா(கனடா), கஜேந்திரன், ரதுஷன், அங்கஜன்(பிரான்ஸ்), சாயிசரண்யா, சாயிகிருஷ்ணா(கொழும்பு), ரொஷான், ஹரிஷான்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கனகசபை(மலேசியா), குமாரசாமி(மல்லாகம்), இரத்தினசிங்கம்(மல்லாகம்), புஸ்பராணி(மலேசியா) மற்றும் தர்மலிங்கம்(கனடா), கேதுராஜா(மலேசியா), அழகுராணி(சிங்கப்பூர்), இந்திராணி(கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளுக்காக கனத்தை பொது மயானத்திற்கு ஞாயிறு (26.12.1999) பிற்பகல் 3.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:-
**திரு.மாணிக்கசுந்தரம் குடும்பத்தினர்.**

**இல.82, லோறன்ஸ் வீதி,**
**கொழும்பு - 04.** (C/10320)

## அப்பாக்குட்டி இராசையா

கோண்டாவிலைச் சேர்ந்த அப்பாக்குட்டி இராசையா 22-12-99 அன்று காலமானார்.

இவர் அப்பாக்குட்டி - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் இரத்தினம்மாவின் சகோதரரும் இலட்சுமியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற நாகமுத்து - முத்து (அராலி) தம்பதிகளின் அன்பு மருமகனும் சித்திரா, சிவனேசன்(சைக்கிள்கடை), லலிதா(பிரான்ஸ்), யோகானந்தன் (D.R.C.C), லோகநாதன்(பிரான்ஸ்), தவமணி, புஸ்பராணி(ஜேர்மனி), கலாநிதி, காலஞ்சென்ற இரகுநாதன், தயாநிதி, இராஜகுமார்(பிரான்ஸ்), காலஞ்சென்ற பாஸ்கரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் பொன்ராசா (சாரதி), பவளம், சிவலிங்கம் (பிரான்ஸ்), இன்பமணி, நிர்மலா (பிரான்ஸ்), லிங்கேஸ்வரன் (D.R.C.C), செல்வநேசன் (ஜேர்மனி), பாஸ்கரன் (சிற்பக்கலை), கணேசலிங்கம்(A.P.C) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (சிமெந்து கூட்டுத்தாபனம்) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22-12-99 பிற்பகல் 3மணியளவில் கோண்டாவில் கிழக்கு இந்துமயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தல் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இ.சிவனேசன் (சைக்கிள் கடை)**
**இ.யோகானந்தன்** (D.R.C.C)

**ஸ்ரேசன் றோட்,**
**கோண்டாவில்.** (72042)

## அருணாசலம் பொன்னையா

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு நாகலிங்கம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பொன்னையா 24-12-99 அன்று காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சரோஜினி தேவி மற்றும் இராசமலர்(ஜேர்மனி), பொன்மலர்(சுவிஸ்), மகிழ்மலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் பஞ்சலிங்கம்(கொலன்ட்), அமிர்தலிங்கம் ஆகியோரின் சிறியதந்தையும் காலஞ்சென்ற நாகேஸ்வரி, காலஞ்சென்ற மகாதேவா மற்றும் தவமணி(மணி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற செல்லையா, காலஞ்சென்ற சபாரத்தினம் ஆகியோரின் சகலனும், சற்குருநாதன், சற்குணராஜா, கணேசநாதன், பாலசுந்தரம் புஸ்பராணி கலாஜோதி ஆகியோரின் மாமனாரும் பாமினி, அசோக், அச்சுதன், விலூஜன், ஆதவன், நரேஜிகா, ஆர்த்திகா, மிதுலா, பிரவீன், பிரியங்கன், சுகிர்தன், சுமித்திரன், கயலக்ஸன், கிசோ ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25-12-99) நண்பகல் 12மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மணி (மைத்துனி)**
**பாலசுந்தரம் (மருமகன்)**

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (72048)

## திருமதி முத்துத்தம்பி ஞானம்மா

நெட்டிலைப்பாய், கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி முத்துத்தம்பி ஞானம்மா 21/12/99இல் திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் - ஆச்சிக்குட்டி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற விசுவலிங்கம் முத்துத்தம்பியின் அன்பு மனைவியும், விசுவலிங்கம் இராஜசிங்கம் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்), விசுவலிங்கம் பசுபதி (ஓய்வுபெற்ற படவரையாளர், லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், குலமணி(அமெரிக்கா), புஷ்பராணி(திருகோணமலை), சுந்தரலிங்கம்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), சர்வானந்தன்(பிரதம மருந்தாளர், ஆதார வைத்தியசாலை, திருகோணமலை), பத்மா(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் கமலேஸ்வரி, காலஞ்சென்ற பவளமணி ஆகியோரின் மைத்துனியும் திருமதி ஜெகதீஷ் சுமதி(நியூசிலாந்து), வதனி(இறுதியாண்டு, யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம்); திருமதி சிவகுமாரன் ரஜனி(அமெரிக்கா), திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா றமணி(லண்டன்), தர்ஷினி(ஒனாலி கோல்டிங்ஸ் லிமிடெட், கொழும்பு), காலஞ்சென்ற சசிகுமார், சசிதரன்(வீரகேசரி), திருமதி அருணாசலம் சசிகலா (சுகாதாரத்திணைக்களம்,திருகோணமலை), அகிலன் (கனடா), சுஜந்தன்(கனடா), சுஜீவன்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துவாரகன் (நியூசிலாந்து), நிரோமி(லண்டன்), சாருஜா(நியூசிலாந்து), ஆதவன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22/12/99 அன்று திருகோணமலையில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருகோணமலையில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**க.இரத்தினசிங்கம்**
(மருமகன்)

சைவப்பாடசாலை வீதி,
கோண்டாவில் மேற்கு. (72029)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-12-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org